# கொந்தளிப்பு

செப்டம்பர் 1980 | இதழ் 18

அட்டூழியம் நடக்கிறதே?



வியாபாரிகள் உள்ளே..

## தாயகம் திரும்பியோர் பற்றிய சிறப்பிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (தமிழக) செய்திச் சிதறல்

✱ 1979ம் ஆண்டு முடிய நீலகிரி மாவட்டத்தில் கோத்தகிரி, கடலூர், பந்தலூர், ஆகிய இடங்களில் உள்ள தேயிலைத் தோட்டங்களில், இதுவரை 1800 குடும்பங்கள் வேலைக்காக அமர்த்தப் பட்டுள்ளன.

✱ தனியார் தேயிலைத் தோட்டத் தொழிலாளி நாளொன்றுக்கு 7 ரூபா 12 சதமும் அரசு தோட்டத் தொழிலாளி 6 ரூபா 40 சதமும் (1979ல்) சம்பளமாகப் பெற்றனர்.

✱ பெரும்பாலான தோட்டங்களில் குறிப்பாக சேரம்பாடி, சேரக்கோடு, நெல்லி ஆகிய இடங்களில் தற்காலிக ஓலையால் வேயப்பட்ட குடிசைகளே தொழிலாளருக்கான வீடுகள். பள்ளிக்கூடங்கள், குழந்தைகள் காப்பகங்கள், உரக் காம்பராக்களிலும் தொழிலாளர்கள் தங்கியிருக்கின்றனர்.

✱ தோட்டப் பகுதிகளில் இலங்கையைப் போலவே 100 பிள்ளைகளுக்கு ஓர் ஆசிரியரே பெரும்பாலான இடங்களில் கல்வி போதிக்கின்றனர்.

✱ கன்னியாகுமரி மாவட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள றப்பர் தோட்டங்களில் 234 குடும்பங்கள் குடியமர்த்தப் பட்டுள்ளன.

✱ நெய்வேலியிலுள்ள மிகப் பெரிய விவசாயப் பண்ணையில் 750 குடும்பங்கள் குடியமர்த்தப் பட்டுள்ளன. புதுக்கோட்டை மாவட்டத்தில் வெள்ளாள விடுதி, திராபிடிங்கி போன்ற இடங்களிலும் விவசாயப் பண்ணைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவை தொடங்கி 5 ஆண்டுகளாகியும் இன்னும் குடியிருப்பு, மருத்துவ, கல்வி குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் மிகக் கேவலமாகவே இருக்கின்றன.

✱ அரசு கூட்டுறவு நூற்பாலையில் பணிபுரிய சேரும் ஒவ்வொரு தாயகம் திரும்பியோருக்கும் அரசாங்கம் ரூபா 15,000 அந்தந்த நூற்பாலைகளுக்குக் கடனாகக் கொடுக்கிறது. 1806 குடும்பங்கள் பல்வேறு கூட்டுறவு நூற்பாலைகளிலும் பணிபுரிகின்றன.

வரண்ட நிலங்களில் விவசாயக் காலனிகளை அமைத்து பலனில்லாத ஒரு திட்டமாக விவசாயக் கடன் பெற்ற 2,161 குடும்பத்தினரை ஈடுபட வைத்துத் திண்டாட வைத்துள்ளனர். திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற 100 க்கு 90 கிணறுகளில் தண்ணீர் இல்லாத கட்டாந்தரை நிலங்களில் பயிர் செய்ய முடியாது வேறு மாவட்டங்களுக்கு அகதிகள் அகன்றுவிடுகின்றனர். பம்ப் செட் வசதிகளைச் செய்து கொடுத்தால் இது பயனுள்ளதாக மாறும்.

✱ கர்நாடகம், கேரளா மாநிலங்களில் உள்ள இறப்பர்த் தோட்டங்களிலும், ஆந்திரா மாநிலத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளிலும் 1728 குடும்பங்கள் வேலை செய்து வருகின்றன. மொழி, கல்வி வசதி பற்றி இவர்களுக்குப் பிரத்தியேகக் கவனம் செலுத்தப்படுவது மிகவும் அத்தியாவசியமான தேவையாகும்.

✱ தமிழ்நாடு முழுதும் அதிகாலை வேளையில் பாதைகளில் செல்லும் வேற்று நாட்டார் கண்களை மூடிக் கொண்டுதான் செல்ல வேண்டும். குழந்தைகள், சிறுவர்கள், வளர்ந்தவர்கள் என்ற வேறுபாடின்றி அனைவரும் பொது இடங்களில் கூச்சமின்றி மலசலம் கழிக்கும் காட்சிகளால் கண்களைப் பழுதாக்கிக் கொள்ளாமலிருக்கவே இந்த யோசனை!

✱ ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொந்தளிப்பு!

## தாயகம் திரும்பியோர் பிரச்சினைகள்

கடந்த ஏப்ரலில் பத்துப்பேரும் ஒகஸ்டில் நானும் தமிழகம் சென்று இராமேஸ்வரம், மதுரை, கொடைக்கானல், கோயம்புத்தூர், சேலம், கோத்தகிரி, குன்னூர், கடலூர், நீலகிரி, திருச்சி, பெங்களூர், சென்னை ஆகிய பல இடங்களிலும் புனர்வாழ்வு தேடி ஓடியவர்களை நேரில் கண்ட—அவர்களன் அவலங்களை-துயரங்களைத் துன்பக் கொடுமைகளை எமது வாசகர்களுக்கும் முடிந்த அளவு தெரிவிக்க எண்ணியே இந்த இதழில் பெரும்பாலும் அவை பற்றிய கட்டுரைகளைத் தந்துள்ளோம். ஓர் இத்ழில் அடக்கி விட முடியாத நீண்ட நெடுங் கதைகள் சுருக்கமாகவே உள்ளன. அவ்வப்போது தொடர்ந்து மற்ற இதழ்களிலும் அது சம்பந்தமான செய்திகள் வரும்: வாசகர்கள் இதுபற்றி மேலும் அறிந்து கொள்ள விரும்புபவைகளை எழுதலாம்,

## கதவடைப்பு! — தொழிலாளர் பரிதவிப்பு!

சம்பள உயர்வு கோரி வேலைத்தலங்களைப் பகிஷ்கரித்த லட்சக்கணக்கான தொழிலாளர்கள் அகில உலகிலுமே எங்குமில்லாத வகையில் வேலையிழந்து விட்ட நிலைகளை எல்லோரும்* அறிவோம். நம் நாட்டில் முதலீடு செய்ய விரும்பும் அந்நிய நாட்டினரின் மனம் கோணாமலிருப்பதற்காக, பல லட்சம் தொழிலாளர் குடும்பங்களின் வயிற்றில் விழுந்த அடியை எண்ணினால் உள்ளம் வேதனைப்படுகிறது. அரசு இது விடயத்தில் தன் பிடிவாதப் போக்கைக் கை விட்டு உடனடியாக அனைவரையும் திரும்பவும் வேலைக்கு அழைத்து, பட்டினியால் வாடும் பல ஆயிரக் கணக்கான குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும்.

## நுவரெலியாவிற்குத் தமிழ்க் கல்விப் பணிப்பாளர்

தோட்டப் பாடசாலைகள் கையேற்கப் பட்டபின் நுவரெலியா மாவட்ட கல்வித் திணைக்களத்தின் தமிழ்ப்பகுதி விரிவடைந்து விட்டது. தமிழ்ப்பிள்ளைகளும் பாடசாலைகளுமே இம்மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையில் இருப்பதால் உடனடியாக மேலதிகத் தமிழ்க் கல்விப்பணிப்பாளர் ஒருவரை நியமிப்பது மிகவும் அவசியமென வலியுறுத்துகிறோம்.

—ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டி முடிக்கப்படாத வீடுகள்

## காணாமல்போய்விட்ட கண்ட்ராக்டர்கள்!

தாயகம் திரும்புவோர் மறுவாழ்வுத் திட்டம், தரகர்களின் நல்வாழ்வுத் திட்டமாகவும் கண்ட்ராக்டர்களை லட்சாதிபதிகளாக்கும் காமதேனுவாகவும் தான் பயன்படுகிறது.

இராமேஸ்வரம் மண்டபத்தில் வந்து தங்கும் அகதிகளை கண்ட்ராக்டர்களின் தரகர்கள் நைச்சியமாகப் பேசி கைச்செலவுக்கு ரூ 100/- அல்லது 200/- என்று கொடுக்கின்றார்கள். இதில் மயங்குபவர்கள் தரகர்களையே அரசு அதிகாரிகளென நம்பி வீட்டுக்கடன் - வேலைவாய்ப்பு முதலியவற்றைப் பெற்றுத்தருமாறு தங்கள் பாஸ்போர்ட், குடும்ப அட்டை ரூ 3000/- க்கான வங்கிக் காசோலை ஆகியவற்றைக் கொடுப்பதோடு வெற்றுத்தாள் சிலவற்றில் கையொப்பத்தையும் இட்டுக் கொடுத்து விடுகின்றனர். மதுரை போன்ற இடங்களில் இருக்கும் போலி கண்ட்ராடர்களின் ஏஜண்டுகளான இத்தரகர்கள் சகல தஸ்தாவேஜுகளுடனும் வங்கிக் காசோலையுடனும் ஒரு குடும்பத்தை ஒப்படைக்க (கண்ட்ராக்டருக்கு) ரூ 300/- முதல் 500/- வரை கமிசனாகப் பெறுகின்றனர்.

இந்தப் போலி கண்ட்ராக்டர்கள் இவர்களை வங்கிக்குக் கூட்டிக்கொண்டு போய் வங்கிக் காசோலையை மாற்றி தாமே பணத்தை எடுத்துக்கொண்டு 'இந்த காசோலை க்ரோஸ் பண்ணியிருப்பதால் 6 மாதத்திற்கு அல்லது ஒரு வருடத்திற்குப் பணம் எடுக்க முடியாது எனவும் செலவிற்குப் பண தேவைப் பட்டால் தன்னிடம் பெற்றுக் கொள்ளும் படியும் கூறி அவர்களைத் தம் பிடியில் வைத்துக் கொண்டு, பின்பு அவர்கள் தங்களிடம் கடனாகப் பெற்றுக்கொண்டதாக அவர்கள் கையெழுத்துப்போட்ட வெள்ளைத் தாள்களிலேயே எழுதி வைத்துக்கொள்வார்கள்.

வேறு சிலர் தாயகம் திரும்பியவர்களை நீலகிரி, கடலூர் போன்ற இடங்களுக்குக் கூட்டிக்கொண்டுபோய், அங்குள்ள தேயிலைத்



தாயகம் திரும்பியோர் சிலர் தங்கள் வீடுகளின் முன்னால் காணப்படுகிறார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கப்பலிலும் — புகைவண்டியிலும் — ராமேஸ்வரத்திலும் — மன்னாரிலும்

# ★ மக்கள் படும் அவதி!!! ★

(தாயகம் திரும்பியோர் நிலை அறிய சமீபத்தில் தமிழகம் சென்றிருந்த குழுவில் ஒருவராகச் சென்ற போஹில் தோட்டத்தில் தொழில் செய்யும் திரு S, ஜெபமாலை கங்காணி தனது அனுபவத்தை எழுதுகிறார். அவரது பாணியிலேயே அதனைத் தருகிறோம்)

புகைவண்டியில் பதுளையிலிருந்தே மக்கள் ஆசனங்களைப் பிடித்துக்கொள்வதால் அட்டனிலேயே இட நெருக்கடி ஏற்படுகின்றது. பெரும்பாலான மக்கள் நிற்கக் கூட இடமில்லாத நிலையில் நெரித்துக் கொண்டு, நின்றபடியே பிரயாணம் செய்கின்றார்கள். இப்படியே பொல்காவலை வரையில் ஒவ்வொரு புகையிர நிலையத்திலும் முண்டி அடித்துக்கொண்டு ஏறுவது மிகவும் பரிதாபமாக இருக்கின்றது.

இந்தியப் பயண நாளும் குறிப்பிட்டாச்சு: குறிப்பிட்ட திகதியில் போயாக வேண்டும் இது எல்லோரும் அறிந்த விஷயம் இந்தியப் பயணமென்றால், பாஸ்போட் எடுக்க வேண்டும்; விசா எடுக்க வேண்டும். பேங்கில் பணம் போட வேண்டும்: டிக்கட் எடுக்க வேண்டும். இந்திய பிரயாணம் வாரத்தில் இரண்டு நாட்கள் நடைபெறுகின்றன. இந்த நாட்களிலாவது. நெருக்கடி இன்றி பிரயாணம் செய்யக் கூடிய வசதியை அரசாங்கம் செய்து கொடுக்கலாம்.

---

தோட்டங்களில் வேலை வாங்கித்தருவதாகவும் வீடு கட்டுவதற்கும் விவசாயம் செய்வதற்கும் நல்ல நிலங்கள் விலைக்கு வாங்கித்தருவதாகவும் சொல்லி ஒரு துண்டுக்கு ரூ 1000/- முதல் 1500/- வரை விலையெனக்கூறி அவர்களிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு, பட்டா இல்லாத நிலங்களை எவ்வித பத்திரமுமின்றி இவர்கள் தலையில் கட்டி விடுகின்றனர்.

அரசாங்கத்திடமிருந்து கிடைக்கவேண்டிய தொழிற் கடன், வீட்டுக் கடன் ஆகியவற்றைப்பெற்றுத் தருவதாகச் சொல்லி வியாபாரக் கடன் ரூ 2000/- பெற்றுத் தருவதற்கு ரூ 1000/- வரை கமிசன் பெறும் ஏஜண்டுகள் எல்லா அரசு அலுவகங்களிலும் முக்கியமாக திருச்சி, முசிறி, துறையூர், பெரம்பலூர் ஆகிய இடங்களில் புனர்வாழ்வு பகுதியில் வேலை பார்க்கும் பல அரசு ஊழியர்களின் ஒத்துழைப்புடன் செயல்படுகின்றனர். இது போன்ற எத்தனையோ வகைகள் தாயகம் திரும்புவோரை ஏமாற்றுவதற்காகக் கையாளப்பட்டு கடைசியில் அவர்கள் வீடின்றி – தொழிலின்றி வாழ எவ்வித வழியுமின்றி பிச்சை எடுக்கும் நிலைக்கு ஆளாகிறார்கள்.

மதுரை, மேலூரில் ஸ்பின்னிஸ் மில் ஒன்றில் தொழில் புரியும் அகதிகளுக்காக சுமார் 60 வீடுகள் கட்டப்பட்டு 10 வீடுகள் மட்டுமே பூரணமாக்கப்பட்டுள்ளன மற்ற வீடுகள் அரைவாசி சுவருடன் நிற்கின்றன. ஒரு வருடத்திற்கும் மேலாக! கண்ட்ராக்டரைக் காணவில்லை. மதுரை தத்தனேரி என்ற இடத்திலும் இன்னும் சில வீடுகள் கூரையின்றி நெடுங்காலமாக இருக்கின்றன. இங்கு ஒரு வீடு நடுப்பகுதியில் இரண்டாகப்பிளந்து எந்த நேரமும் தகர்ந்து விழும் நிலையில் இருக்கின்றது. இன்னமும் இதனுள் ஒரு கை கால் விளங்காத ஒரு பெரிய மனிதர் உள்ளே படுத்திருக்கிறார்.

நான்கு தவணைகளில் கொடுபட வேண்டிய வீட்டுக்கடனை ஒரே முறையில் எடுக்கும் வித்தையும் கண்ட்ராக்டர்களுக்கே தெரியும். 400 பேர்களடங்கிய 74 குடும்பத்தினருக்கு பட்டை நாமம் சாத்திய ஒரு கண்ட்ராக்டர் தற்போது போலீசாரிடம் சிக்கியுள்ளார். கடன் வழங்கும் திட்டத்தில் 'ஓட்டை' இருக்கிறது என்பது நிச்சயமாகத் தெரிகிறது. ஏதாவது பயனுள்ள மாற்று வழி அவசியம் தேவை 'உங்களை ஏமாற்றியவர்களை நீங்களே பிடித்துக் கொண்டு வாருங்கள்'' இப்படி ஊர் தெரியாத அகதிகளைக் கேட்கிறாராம். ஓர் கலெக்டர். பாராட்டுவோம் அவரை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தப்படி தாயகம் செல்வோர்! ஊர் பார்க்கப்போவோர்! வியாபார நோக்கத்தோடு செல்வோர்! புத்தகாயா என்ற புனித ஸ்தலம் போவோர்! ஹிப்பிகள் அவர்களை அனுப்ப வரும் உறவினர் கூட்டம், இப்படியே இட நெருக்கடி ஏற்படுகின்றது. பல இடஞ்சல்களின் மத்தியில் பொல்காவலை சென்றடைந்தோம். இரவு சாப்பாடு பொல்காவலையில், சாப்பாடு முடிந்துவிட்டது. கொழும்பிலிருந்து வரும் தலைமன்னார் புகைவண்டியை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம். வண்டியும் வந்துவிட்டது. விழுந்தடித்துக் கொண்டு ஏறுகின்றோம். வண்டியும் நகர்கிறது. பொல்காவலைவரை வந்த உறனர்கள் விடை பெற்றுக் கொண்டு அழுத கண்ணீரும், சிந்திய மூக்குமாக பிரியாமல் பிரிகிறார்கள். வண்டிக்குள்ளும் அழுகை; மனதை உருக்குகின்றது. வண்டியில் தண்ணீரில்லை; முகம் கழுவ முடியாது. காலைக் கடன் முடிக்கமுடியாது என்ன செய்வது?

5-30 மணி; தலைமன்னார் பியர்! வண்டியும் நின்று விட்டது. எல்லோரும் மூட்டைகளை தூக்கிக்கொண்டு ஓடினோம். எங்களுக்கு முன்னும் நூற்றுக்கணக்கானோர் வரிசையில் நின்று கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு பின்னும் நூற்றுக்கணக்கானோர் நின்றுகொண்டிருக்கிறார்கள் அங்கே மூன்று வரிசைகள். சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் தாயகம் திரும்புவோர்! யாத்திரை போவோர்! சாதாரண பிரயாணிகள்! முதலாம் வகுப்பு பிரயாணிகள்! இப்படியாக உள்ளே கணக்கிட்டு அனுப்புகிறார்கள். கையில் பாஸ்போர்ட் தயாராக வைத்துக் கொள்ள வேண்டும். நாம் கொண்டு போகும் சாமான்களை எழுதிக் கொடுப்பதற்கு ஒரு பாரம் கொடுக்கப்படுகின்றது. அதில் நாம் கொண்டுபோகும் சாமான்களை விபரமாக எழுதிக்கொண்டு போகவேண்டும். அங்கே இருவர் எழுதிக் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு எழுத்துக் கூலி ரூபா 2/- கொடுக்கவேண்டும். பாஸ்போர்ட்சோதனை, விசாசோதனை, டிக்கட் சோதனை, இப்படி பல சோதனைகளின் முடிவில் சாமான்களின் சோதனை.

சாமான்களை சோதிக்க 15 அதிகாரிகள் வரிசையாக அமர்ந்திருக்கிறார்கள். ஒரு மேலதிகாரியால், ஒவ்வொரு நம்பர் சொல்லப்பட்டு அவர்களிடத்திற்கு நாங்கள் அனுப்பப்படுகிறோம். சாமான்களைப் பிரித்து சோதிக்கிறார்கள். அளவுக்குமேல் கொண்டுசெல்கிறவர்கள் தடை செய்யப்படுகிறார்கள். மேலதிக சாமான்களுக்கு வரி விதிக்கப் படுகிறது. அல்லது பறிமுதல் செய்யப்படுகின்றது. இந்த சோதனை 5-30 மணிதொடக்கம் 9-30 மணிவரை நடைபெறுகின்றது. 4-00 மணிநேரம் குடிக்க நீரின்றி கால் கடுக்க மூட்டையையும் தூக்கிக்கொண்டு நிற்க வேண்டும். எப்படியோ சோதனையும்



அட்டைப்படம்

முடிந்து கப்பல் ஏறுவற்கு பாலத்தில் போய்க் கொண்டிருக்கிறோம், அங்கேயும் வரிசை—கியூ! 10 பேராக கப்பலுக்குள் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் வரிசையில் நின்று கொண்டிருக்கிறோம்; எங்களுக்குப் பின்னே வந்தவர்கள் உள்ளே போகிறார்கள். எப்படி போகிறார்கள்? அவர்கள் அனுபவ முள்ளவர்கள். கொடுக்க வேண்டியதைக்கொடுத்து முன்னே சென்று விடுகிறார்கள்.

27ம் பக்கம் பார்க்க......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு கொடிகள்!

எஸ். கே. பாலகிருஷ்ணன்

கொடி ஏற்றுவதற்கு இன்னும் இரண்டே இரண்டு நாட்கள்தான் இருக்கின்றன. மாரியம்மன் கோவில் லயத்தில் பதட்ட நிலை உருவாகி, ஒரு கிழமையாக புகைந்த வண்ணமாக இருக்கின்றது.

காலம் காலமாக ''தேயிலைமலை'' தோட்டத்தில் இருந்து வந்தது ஒரே சங்கம்தான். இனிமேல் அங்கே ஒரு சங்கம் இருக்காது. பதிலாக இரண்டு சங்கங்கள் ஆட்சி செய்யும். மாரியம்மன் கோவிலுக்கு முன்னே ஒரேயொரு கொடி பறந்த இடத்தில் இன்னும் இரண்டு தினங்களில் இரண்டு கொடிகள் பறக்கப் போகின்றன.

இந்தப் புதிய சங்கத்தின் பிறப்பு, பழைய சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு சவாலும் தன்மானப் பிரச்சினையுமாகும். ஜன நாயக நாட்டில், எந்த சங்கத்தில் யார் இருந்தாலும் எவருக்கும் நட்டமில்லை யென்று இருந்தாலும் இருக்கும்ஒரு சங்கத்தை இரண்டாகப் பிளந்து ஒரு முழுமையை இரண்டு மூழிகளாக மாற்றுவதுதான் பழைய சங்கத்துக்காரரின் பெருங் கோபத்துக்குக் காரணம். இது ஒரு நியாயமான காரணம்தான் என்ருலும், புதிய சங்கம் ஆரம்பிப்பவர்களின் கூக்குரலையும் செவி மடுப் போமானுல், அங்கும் அசாதாரணமான நியாயம் தோன்றத்தான் செய்யும்.

எதிர் வரிசையில் (புதிய சங்கம்) தலைமைப் பதவியை ஏற்றுக் கொள்ளப் போகும் ஜெபமாலை ஓர் இளைய தலைமுறை. காலங் காலமாக ஒரே சங்கத்தில் இருந்து என்ன புண்ணியம்? சங்கத்தில் தலைவனுக இருப்பவனின் வீட்டுக்குத் தான் சகல சலுகைகளும். (இப்போது ஜெபமாலை அந்தச் சங்கத்துத் தலைவர் ஆறுமுகத்தை அப்பா என்று கூப்பிடுவது கிடையாது. என்றைக்கு வேறு சங்கம் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் மூளை விட்டதோ அன்றிலிருந்தே அடேய் புடேய் என்ற வார்த்தைகளும் வளரத் தொடங்கி விட்டன.) தலைவன் பெண்டாட்டி எத்தனை மணிக்கு மலைக்கு போனுலும் வேலை. அவள் விரும்பிய நேரத்தில் மலையை விட்டு இறங்கி வந்தாலும் பேருதான். அதற்கு ஏற்ற துரைப் பயலும் வந்து வாய்த்திட்டான். தலைவன் ஆறுமுகத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் கைக்காசு வேலைகள், ஓவர்டைம்கள். ஆறுமுகம் யாருக்குச் சொல்கிருனே அவர்களுக்கு மட்டுமே புது வீடு .. தோட்டந் துறவுகள், மாட்டுப் பட்டி யெல்லாம்.

நம்பள மாதிரி ஆளுங்களுக்கு ஒரு சின்ன சலுகை கூட கெடையாதே. சரி இதயெல்லாம் விட்டுத் தொலைப்பம். இந்த ....... கோட்டாப் பணத்து சங்கதிய மட்டும் கொஞ்சங் கேளுங்க. எல்லாத்துவூட்டு சல்லியும்தான் செக்ரோலுல புடிச்சி சங்கத்துக்குப் போவுது. அதுல இருந்து தான கோட்டாப் பணம் வருது. அந்தப் பணத்த...... இந்த தலைவனும்...... ஒபத் தலைவனும் காரியதரிசியுமா சேந்து மூக்கு முட்டக் குடிச்சி புட்டு ஆடிக்கிட்டு வருவாங்க. வந்து அதைப் பண்ணிடுவன் இதைப் பண்ணிடுவன்னு ஆட்டமா ஆடுவாங்க.




இந்த அநியாய மெல்லாம் பொறுக்கமாட்டாமத்தான், நான் இப்ப புது சங்கம் சேத்து இந்தப் பயலுவல எல்லாம் அடக்கப் போறேன் பொடியங்க எல்லாம் ஏம் பக்கந்தான். ஏன் நம்ம எதிர்க் கட்சிக்கார ஆறுமுகம் தலைவன் மருமகன் சீர்பாதம் கோட எனக்குத்தான் சப்போட்டு குடுக்கப் போறுன். போமு குடுத்து ரெண்டு கெழமையாச்சி.........மெஜாரிட்டியும் இனிமே புடிச்சிப் புடுவோம். இன்னும் ரெண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டேரெண்டு நாளுதான் இருக்கு கொடியேத்த எத்தன கஷ்டம் வந்தாலும் கொடி ஏத்தாமல் விடமாட்டோம்.

பழைய சங்கத்துத் தலைவர் ஆறுமுகம் ஓர் பழைய மனிதர். தலைவர் என்றால் கழுத்தில் கொலர் இல்லாத சட்டையும், சால்வையும், வேட்டியும் அணிய வேண்டும் என்ற சம்பிரதாயம் கொண்டவர். தன்னிடம் உள்ள இரண்டு செட் வேட்டி, ஜிப்பா, சால்வையை இரண்டு தரம் வண்ணானுக்குப் போட்டெடுத்து சுத்தமாக காட்சி தருவார். தூர தொலைவு பிரயாணம் கொன்பிரன்ஸ் என்பவற்றிற்கு டோபியிடம் கைமாற்றாக வாங்கி அணிந்து 'பளிச்' என்று காட்சியளிப்பார். நூற்றுக்கு எணபது வீதம் தோட்ட நிர்வாகத்தின் பக்கமும் இருபது வீதம் தொழிலாளரின் பக்கமும் பேச வேண்டும் என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டவர்.

நான்கு வருடத்திற்கு முன்னர் கவ்வாத்து காட்டில் எழுந்த பிரச்சினை ஒன்றில், சக தொழிலாளர்கள் தங்களால் இருநூறு மரம் கவ்வாத்து வெட்ட முடியாது என்று போராட்டம் நடத்திய போது தன்னால் இருநூறு மரம் கவவாத்து வெட்ட முடியும் என்று சொல்லியதோடு நில்லாமல் அதைச் செயலில் காட்டிய வீரர் அதன் காரணமாக துரையின் ஆதரவை பெற்று அவரின் அபிமானத்துக்குள்ளாகி கங்காணி வேலையைக் கைப்பற்றியவர். கங்காணி வேலையில் கடுமையாக ஆட்களை விரட்டி அட்டகாசம் புரிந்ததன் காரணமாக தொழிலாளர்களின் சீற்றத்திற்கும், நிர்வாகத்தினரின் பாராட்டுதலுக்கும் உரியவராகி இரண்டு வருட ஓட்டத்தில் 'தேயிலை மலை' தோட்டத்தில் நிரந்தரமானதோர் இடத்தைப் பிடித்துக் கொண்டார். இந்த நேரத்தில்தான், அங்கு தலைவராக இருந்த செங்காயன் தனக்கு விரோதமாக செயல் பட்டமையும் அதன் காரணமாக தான் பட்ட இன்னல்களும் அவரின் நினைவில் ஊஞ்சல் போல் ஆடின.

அதன் விளைவாகத் தான், 'நான் ஏன் தேயிலை மலை தோட்டத்துத் தலைவனாக வரக் கூடாது?' என்ற எண்ணம் அவர் மனதில் தோன்றத் தொடங்கியது. இந்த எண்ணம் ஆறுமுகம் கங்காணியின் மனதில் தோன்றிய நாள் முதலாய் அவர் இரட்டை வேடம் போட தொடங்கினார் ஒன்று — துரைமார், கணக்கப் பிள்ளைமார் இல்லாத நேரம் பார்த்து அவர்களைத் தொழிலாளரின் முன்னே திட்டி தான் அவர்களின் மத்தியில் செல்வாக்கைத் தேடிக் கொள்வது. மற்றது — நிர்வாகத்தினரைக் கண்டவுடன் ''ஐயா! இந்த தலைவன் பய செங்காயன் இருக்குறானே — இவன் ஆளுகளயெல்லாம் வேலை செய்ய விடாமல் கிண்டல் பண்ணுறான். எதும் வந்தா 'நான் பாத்துக்கிறேன்' னு சொல்லி ஆளுகளக் கிண்டி விடுறான். அதுனால தான் ஆளுக எல்லாம் குளிர் விட்டுப் போயி ஆடுறாங்க. மொள்ளமா நான் தலைவனா வந்துட்டேன்னு, எல்லாத்தையும் ஒரே அமுக்கா அமுக்கி, தோட்டத்துல நிர்வாகத்துக்குத் தொந்தரவு இல்லாமப் பண்ணிப் புடுவேன் என்றார்.

## கொன்று முடித்திடுமோ?

**- கதிரேசன் -**

தென்றல் உலாவிடும் வேளையிலே—அன்பு
சேர்ந்து குலாவியச் சோலையிலே – நாம்
என்றும் அணைத்திருந்தோம்-உயிர்
ஒன்ற இணைந்திருந்தோம்—அந்த
இன்ப சுகம் அகன் றேகிட நீயெனை
இன்று பிரிந்துவிட்டாய் - எங்கோ
சென்று மறைந்துவிட்டாய் - என்றன்
எண்ணத் தினித்திடும் வண்ணச்சுவை இனி
நண்ணக் கிடைத்திடுமா - என்றும்
உண்ணப் படைத்திடுமா?

கொஞ்சு மழலையின் பேச்சினிலே - உன்றன்
கோல விழிக்கடை வீச்சினிலே - என்றன்
நெஞ்சம் நெகிழ்ந்திருந்தேன் - உன்னைத்
தஞ்சம் புகுந்திருந்தேன் - பெரும்
வஞ்சம் புரிந்தெனை நீங்கிவிட்டாய் - அந்த
மர்மம் புரிந்திலனே – உன்றன்
வர்மம் தெரிந்திலனே – என்றன்
உள்ளத் தினித்திடும் கள்ளின் சுவை இனி
அள்ளக் கிடைத்திடுமா ? - என்றும்
கொள்ளப் படைத்திடுமா?

காதற் களிமிகும் லோகத்திலே —அன்பைக்
காணிக்கை யாக்கியுன் மோகத்திலே—மிக்க
போதை நிறைந்திருந்தேன் - அயல்
ஏதும் மறந்திருந்தேன் - இன்று
வேதனை மிஞ்சிட நீயகன்றாய் - இங்கு
வேறு செயலறியேன் - இதில்
தேறு முறை தெரியேன் – என்றன்
சிந்தை நிறைந்திட நின்ற சுகம் இனி
என்று கிடைத்திடுமோ ? - என்னைக்
கொன்று முடித்துடுமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுக்கு, 'தாங்க என்னப் பண்ணணும்' —கணக்கப்பிள்ளை கேட்டார். தெரியாதுங்களா அய்யா...... நான் சொல்லுற ஏழெட்டுப் பேருக்கு கொஞ்சம் லேசு வேலயா குடுங்க,மீதி எல்லாத்தையும் நான் பாத்துக்குறேன். பயலுவள எனக்கே கை தூக்க வச்சிப் புடுறேன்' ஆறுமுகம் சொன்னார். கணக்கப்பிள்ளை யோசித்தார்

ஆறுமுகம் தலைவன் ஆனால்...தனக்கு எதிராக யூனியன் ஆபீசிலிருந்து வரும் கடிதங்களை நிறுத்தலாம்...... தன் தோட்டத்துக்கும், மாட்டுக்கும் எத்தனை ஆள் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். தனக்கு சார்பானவருக்கு மாத்திரம் கைக்காசு வேலைகளைக் கொடுத்து ஒரு கணக்கு அடிக்கலாம். எதிர்த் தரப்பு தனக்குச் சாதகம் என்றால் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் பாயலாம். சரி .. ஆறுமுகத்தை எப்படியும் 'தலைவனாக்கியே தீர வேண்டும்.

ஆறுமுகம் கங்காணி — ஆறுமுகம் தலைவர் கங்காணியாகி விட்டார். நான்கு வருடங்களாக எந்த விதமான எதிர்ப்பும் இல்லாமல் நிர்வாகத்தின் அனுசரணையுடன் தனிக் காட்டு ராஜாவாக இருந்து வந்து விட்டார். எதற்கும் ஓர் எல்லையுண்டு அல்லவா? அந்த எல்லை மீறல் தான் இந்த முறை 'தோட்டக் கமிட்டித் தேர்தல்' வைக்க வேண்டும் என்ற 'அறை' கூவலாகும்.

முதலில் அந்த அறை கூவலை ஆதரித்த ஆறுமுகம், நிலைமை தனக்கு பாதகமாக தோன்றியவுடன் எதிர்க்கத் தொடங்கினார். சின்னப்பயல்கள் கையில சங்கத்த ஒப்படைச்சா வீணா துரைமார்களோட மோதி ஸ்ட்ரைக்குகளும் அடிதடிகளும் ஏற்பட்டு நிலைமை மோசமடையும் என்று தனது தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்தவர் கணக்கப்பிள்ளை அய்யாவை சந்தித்து இதற்கு தக்கவாறு எப்படி இயங்கலாம்? என்று மந்திர ஆலோசனை செய்தார். 'ஆறுமுகம் நீ இருந்த மாதிரி பழைய சங்கத்துத் தலைவனாவே இரு, அவன் ஜெபமாலைப் பயல புதுச் சங்கம் சேக்க வை. அவன்க எல்லாம் தனியாப் பிரிஞ்சுட்டாங்கன்னா நான் அவன்கள அப்புடியே கசக்கி புளிஞ்சி ஒங் காலடிக்கே கொண்டு வந்துப்புடுறேன்' கணக்கப்பிள்ளை காரமாகவே சொன்னார்

ஆறுமுகத்தின் முகத்தில் களை கட்டியது. ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள்: தானே தலைவனாக இருப்பது. தன்னை எதிர்க்கும் ஜெபமாலைப்பயல் சித்திரவதைபடுவது. என்னையார் வேணுமின்னாலும் எதிர்த்துப் பார்! நான் யாருக்கும் பயமில்லை: சவால் விட்டார் ஆறுமுகம்.

சங்கம் இரண்டாகப் பிளந்து கொண்டது. நிர்வாகத்தினரின் சகல போர்த் தந்திரங்களுக்கும் ஈடு கொடுத்து புதிய சங்கம் தன் சந்தா போம்களை துரையிடம் கையளிக்கின்றது. சங்கத்தின் வளர்ச்சியைக் கண்ட துரை, கொடி ஏற்றுவதற்கு, ஜெபமாலைத் தலைவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க மரமும் கொடுத்து விட்டார். இன்னும் இரண்டே நாட்களில் புதியக் கொடி யொன்று பறக்கப் போகின்றது......

மாரியம்மன் கோவில் திமிலோகப் படுகின்றது.

கொடி மரம் ஊன்றப்படும் நேரத்திலே எழுந்த வாக்கு வாதம் முற்றுகின்றது. கொடி ஊன்றத் தூக்கும் போது சரிந்து, பழைய சங்கத்து ஆள் ஒருவனின், மரக்கறித் தோட்டத்து வேலியில் சாய்ந்ததால் ஏற்பட்ட வாக்குவாதம் இரத்தம் சிந்தும் அளவுக்கு முன்னேறுகின்றது. கலவரம் பெரிதானவுடன்—அதை எதிர் பார்த்தவர் போல பழைய தலைவர் ஆறுமுகமும் வந்து விட்டார்!

எதிரும் புதிருமாக இரண்டு சங்கத்தவர்களும் நின்று சொற் போர் புரிகின்றனர்......

ஏய்...... காட்டிக் கொடுத்தவன்......கணக்கப்புள்ளைக்கி கூட்டிக் குடுத்தவன்........ எங்க ஒடம்புள ரெத்தம்தான் ஓடுது. எந்தக் கஷ்டமும் எங்களுக்குப் பெரிசில்ல...... உசிரு போனா பெர்யிட்டுப் போவுது......... இது ஒரு தரப்பு.

மறு தரப்பில் ........ டேய் ...........எச்சிப் பொறுக்கிப் பயலுகளா! சங்கமாடா சேக்குறீங்க? ஆளுக நன்மைக்காகவா சங்கம் சேக்குறீங்க? இல்லடா.... இல்ல....... குட்டிக புடிக்கத் தாண்டா சங்கம் சேக்குறீங்க .. அதுக்குத் தாண்டா இந்த ஆட்டம் ஆடுறீங்க.

இதற்குப் பதிலாய் ஆமா...... ஆமா குட்டி தாண்டா புடிக்கப் போறோம்..................! (?)

எதிர்த் தரப்பு எல்லை மீறிப் பாய்கின்றது.
சத்தம் வானைப் பிளக்கின்றது.
கொடி மரம் தன்பாட்டில் சாய்கின்றது.
எங்கும் ஓரே ஓலம்...... ..மரண ஓலம்......

ஒரு பிணம்........... இரண்டு பேர் பிழைப்பது சந்தேகம். ஒவ்வொரு தரப்பிலும் தலா பத்துப் பத்து பேர் ரிமாண்டில்! தேயிலைமலைத் தோட்டத்தில் நிர்வாகத்தினரின் கொடுமை எல்லை மீறுகின்றது.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் தொடரும் நாடற்றவர் பிரச்சினை!

# ஒப்பந்த அமுலில் உள்ள சிக்கல்கள்!!

இலங்கைவாழ் இந்தியத் தமிழர்களின் பிரச்சினை மீண்டும் எழுந்து பயமுறுத்தத் தொடங்குகிறது — தீர்ந்து விடும் என்று எண்ணிய நாடற்றவர் பிரச்சினை பழையபடியும் தொடர இருக்கிறது.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் அகதிகள் தொகை கடந்த சில ஆண்டுகளாகக் குறைந்து வருகிறது. இதனால் சுமார் 5 இலட்சம் இந்தியர்களின் எதிர்காலம் நாடற்ற நிலைக்கு மீண்டும் தள்ளப்படும் நிலையில் உள்ளது. பின்வரும் புள்ளி விபரத்தை நோக்கும் போது இது விளங்கும். 1968ம் வருடத்திலிருந்து தாயகம் திரும்பியவர்களின் எண்ணிக்கை வருட வாரியாக இங்கு தரப்படுகிறது.

| வருடம் | நபர்கள் |
|---|---|
| 1968 | 4,565 |
| 1969 | 5,876 |
| 1970 | 10,156 |
| 1971 | 26,051 |
| 1972 | 32,713 |
| 1973 | 40,979 |
| 1974 | 44,940 |
| 1975 | 26,028 |
| 1976 | 45,785 |
| 1977 | 39,800 |
| 1978 | 29,400 |
| 1979 | 22,119 |

16-6-80 முடிய மொத்தம் 3,37,457 பேர் தாயகம் திரும்பி இருக்கின்றனர். இச் சந்தர்ப்பத்தில் இந்த உடன்படிக்கைகளைப் பற்றி சிறிது பின்னோக்கிப் பார்ப்பது பொருத்தமாயிருக்கும்

1948ல் குடியுரிமைச் சட்டத்தின் மூலம் இந் நாட்டில் இந்தியர்கள் நாடற்றவர்களாகிய பின் 1949ல் இலங்கை பாகிஸ்தானிய சட்டம் உருவானது. ஆனால், இந்தியா எவரையும் ஏற்கத் தயாராயில்லை என்று கூறி விட்டது. 1950 திலும் 1953லும் இலங்கை இந்தியப் பிரதமர்களாயிருந்த நேரு — டட்லிசேனநாயக்கா ஆகியோரும் 1954ல் நேருவும் கொத்தலாவலையும் இது சம்பந்தமான பேச்சு வார்த்தைகளை நடத்தினர்.

1954ல் நேரு கொத்தலாவலை சட்டம் உருவாகியது. இச்சட்டத்தின் கீழ் மனுச் செய்தவர்களில் 1,34,188 பேர் இலங்கை குடியுரிமையும் 2,25,000 பேர் இந்திய குடியுரிமையும் பெற்றனர். மிகுதியானவர்களின் தலைவிதி 10 வருடங்களின் பின் 1964ல் ஸ்ரீமா சாஸ்திரி உடன்படிக்கை மூலமும் 1974ல் ஸ்ரீமாவோ இந்திரா உடன்படிக்கை மூலமும் தீர்த்து வைக்கப்பட்டது. 1964,1974 உடன்படிக்கைகள் படி 6 லட்சம் பேரை இந்தியாவும் 3 75,000 பேரை இலங்கையும் ஏற்றுக் கொண்டு இந்தியா 7 பேருக்கு குடியுரிமை வழங்கி திரும்ப அழைத்துக் கொண்டால் 4 பேருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்குவது என்று உறுதியளிக்கப்பட்டது.

1968ல் ஸ்ரீமா சாஸ்திரி உடன்படிக்கை படி குடியுரிமை கோரி விண்ணப்பித்தவர்களில் 7 லட்சம் பேர் இலங்கைக்கும் 4 லட்சம் பேர் இந்தியாவுக்கும் விண்ணப்பித்தனர். உடன்படிக்கையின் நேர்மாறான விகிதத்தில் விண்ணப்பங்கள் இருந்த போதும் 1974ல் ஏற்படுத்தப்பட்ட ஸ்ரீமா இந்திரா உடன் படிக்கையிலும் இது பற்றி தீர்மானிக்கப்படவில்லை. இலங்கைக் குடியுரிமை கோரி விண்ணப்பித்தவர்களின் பெருந்தொகையான மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.

இந்த நடவடிக்கைகள், பலர், மீண்டும் நாடற்றவர்களாகும் நிலைமையை ஏற்படுத்தும் அதே வேளை, தாயகம் திரும்புவோர் தொகை குறைந்து வருவதும் பெரும் சிக்கல் நிறைந்த பிரச்சினையாக எதிர்நோக்கி கொண்டிருக்கின்றன.

உடன் படிக்கை படி 1982ம் வருடத்திற்குள் இன்னும் 3,62,543 பேர் இந்தியா திரும்ப வேண்டும். இது (1964-1980) கடந்த 16 ஆண்டுகளாக இந்தியா திரும்பியவர்களின் தொகையை (3,37,457 பேர்) விட அதிகமானதாகும். இன்னும் சில வருடங்களுக்குள் இவர்களை அனுப்ப முடியுமா? சம்பத்தப்பட்ட மக்கள் மத்தியிலுள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து முறையாகவும் மனிதாபிமான முறையிலும் திட்டங்கள் வகுத்து ஒப்பந்தங்கள் செய்யப்படாததே இந் நிலைக்கு காரணமாகும். — 13ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொடைக்கானல் — குமரிக்காட்டில்.....

# மிருக வாழ்க்கை வாழும் அகதிகள்!

தமிழ் நாட்டில் - கொடைக்கானல் பகுதியில் அதைச்சுற்றியிருக்கும் குமரிக் காடு, கூக்கால், பேரிச்சம், பெருமாள்மலை ஆகிய மலைப்பிரதேசங்களில் தாயகம் திரும்பியோர் தஞ்சம் புகுந்து உயிர் வாழ ஒரு போராட்டமே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் உடலிலிருந்து உயிர் போகாமல் இருப்பதற்கு - போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஒரு (கணிப்பின்படி) இந்த மலைப்பாங்கான பகுதிகளில் கிட்டத் தட்ட 20,000 பேர் தொழில் செய்து பிழைத்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் இலங்கையிலிருந்து நேரடியாக சொந்த ஊருக்குச் சென்று அங்கு தட்ப வெட்ப சூழ்நிலைகள், தொழில் வாய்ப்பு, வசதி, சமூக தொடர்புகளால் பாதிக்கப்பட்டு வாழ முடியாது அங்கு வந்தவர்கள்; சிலர் மறு வாழ்வுத் திட்டங்களின் கீழ் ''காலனிகளில்,, குறிப்பாக சிவகங்கை - திருநெல்வேலி போன்ற இடங்களில் அமைக்கப்பட்ட காலனிகளில் தொடர்ந்து வாழ வசதியற்ற நிலையில் இங்கு வந்தவர்கள்; மிகச் சிலரே நேரடியாக வந்தவர்கள். அப்படி வந்தவர்களில் சுமார் 20 குடும்பத்தினர் கொடைக்கானல், நகரீயத்திற்குள் 'வாழ்க்கையை' அமைத்துக்கொண்டு வாழ்கிறார்கள்: சுமார் 400 குடும்பங்கள் சொந்த கிராமங்களுக்குப் போய் அங்கிருந்து வந்து வாழ்க்கையை நடத்த எதிர் நீச்சல் போட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

இலங்கையில் தாங்கள் வாழ்ந்த இடங்களின் 'காலநிலை' கொடைக்கானலை ஒத்திருப்பதாலேயே எல்லோரும் இங்கு வந்து குவிகின்றனர். இங்குள்ள பழத்தோட்டங்களிலும் (பியர்ஸ் ஒரஞ்) 'விஸ்கோ' 'டேன் இந்தியா லிமிட்டெட்' ஆகிய நிறுவனங்களில் மரம் வெட்டுதல், மரப்பட்டை உரித்தல், உருளைக் கிழங்கு பயிரிடுதல் போன்ற வேலைகளிலும் ஈடுபட்டுள்ளார்கள்.

## வேலைகள் நிரந்தரம் இல்லை!

இந்த வேலைகள் ஒன்றுமே நிரந்தரமானது இல்லை. 5 மாதங்களுக்கே வேலை; அதிலும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கே வேலை கிடைக்கிறது. பின்னர் வேறு இடங்களுக்கு நாடோடிகளைப் போல மூட்டை முடிச்சுகளுடன் செல்ல வேண்டும்.

## மரம் வெட்டுதல்—பட்டை உரித்தல்

கொடைக்கானல் மலைக்காடுகளில் சவுக்கு போன்ற ஒருவகை மரத்திலிருந்து பட்டை உரிக்கப்படுகிறது. இந்த பட்டையிலிருந்து 'டை' தயாரிக்கும் சாயம் எடுக்கப்படுகிறது. உடைகளுக்கு இது பயன்படுத்தப்படுகிறது. 'விஸ்கோ' என்ற நிறுவனத்திற்காக இந்த வேலை செய்யப்படுகிறது. இந்த பணியில் இலங்கை அகதிகள் சுமார் 2000 பேர் ஈடுபட்டுள்ளனர்.

பட்டை உரிக்கப்பட்ட மரங்கள் 'டேன் இந்தியா நிறுவனத்தால்' வெட்டி எடுத்துச் செல்லப்படுகிறது. இதிலிருந்து 'ரேயோன் மெட்டீரியல்' தயாரிக்கப்படுகிறது. (செயற்கைப்பட்டிற்கான மூலப் பொருள்) இது தவிர மரத்தின் இலைகளும் எண்ணெய் தயாரிப்பிற்குப் பயன் படுகிறது.

## உருளைக் கிழங்கு செய்கை !

மரங்கள் வெட்டப்பட்டு அதன் பயன்கள் பெறப்பட்டதும் மீண்டும் மரக்கன்றுகள் புனர் நடுகை செய்யப்படுகின்றது. அப்படி நாட்டப்படும் கன்றுகள் குறிப்பிட்ட அளவு வளரும் வரையில் அவைகளுக்கிடையில் உருளைக்கிழங்கு செய்கைப் பண்ணப்படுகிறது. இரண்டு மூன்று போகங்களோடு மரக்கன்றுகளும் வளர்ந்து விட உருளைக்கிழங்கு செய்கையும் அந்த இடத்தில் முடிவடைந்துவிடும். பின்னர் வேறு இடம் தேடி ஓட வேண்டும், இப்படி இங்கு சுமார் 20,000 பேர்களுக்கு மேல் தவிக்கின்றனர்.

## குத்தகைக்காரர்கள்—தரகர்கள்

காடு திருத்தும் இந்த வேலைகளையும் முன்னர் குறிப்பிட்ட நிறுவனங்களின் வேலைகளையும் குத்தகை எடுத்து செய்வோர் ஏராளமாக இருக்கின்றனர். இந்த குத்தகைக்கா

13ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேரம்பாடியில் நான் கண்டவை

N. டேனியல்

இலங்கையில் தம் வாழ்வின் பெரும் பகுதியையும், உழைப்பையும் இழந்து விட்டு தாயகம் திரும்பியுள்ள எமது சகோதரர்கள் சிலரை நேரில் கண்டு அவர்தம் புனர்வாழ்வு நிலைகளை அறிந்து கொள்ள சமீபத்தில் தென் இந்திய சுற்றுலா ஒன்றை ஏற்பாடு செய்திருந்த கி. தொ. ஓ குழுவில் செல்லும் வாய்ப்பைப் பெற்ற நான் தமிழகத்தில் 'சேரம்பாடி' என்னுமிடத்தில் சேகரித்தத் தகவல்களை இங்கு சிறிது கூற முற்படுகிறேன்.

## தேயிலைத்தோட்டம்

'சேரம்பாடி' நீலகிரி மாவட்டத்தில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் ஒன்று. தேயிலையின் செழிப்பும் விளைச்சலும் இலங்கையை விட சிறந்ததாக இருக்கிறது வேலை நேரம் காலை 8-00மணிமுதல் மாலை 5-00 மணிவரை. பகலுணவு இடைவேளை உண்டு. காலை 10-00 மணி தேனீர் இலவசமாகத்தரப்படுகிறது. ஆண்களும், கொழுந்தெடுப்பதில் ஈடுபடுகின்றனர்.

## சம சம்பளம்

ஆண்களுக்கும், பெண்களுக்கும் ரூ 6/70 சதம் சமசம்பளமாக வழங்கப்படுகிறது பெயருக்கு 13 கிலோ கொழுந்தெடுக்க வேண்டும். மேலதிக ஒரு கிலோவிற்கு 11 சதம் கிடைக்கின்றது.

## விடுமுறை

சுகயீன விடுமுறையாக 14 நாட்கள் கொடுக்கப்பட்டு சம்பளத்தில் 3/4 பங்கு வழங்கப்படுகிறது.

வருடாந்த விடுமுறையும் உண்டு.

## பிரசவ பணம்

பிரசவ பணமாக ரூபா 600/— கிடைக்கிறது.

வருட போனசும் உண்டு.

## இலவசம்

ஆண்டுக்கொரு சம்பளிப்போர்வையும் பெறுகின்றனர். கம்பளிப் போர்வையின் விலையின் 50% தொழிலாளர்களிடமிருந்து வசூலிக்கப் படுகின்றது.

## முற்பணம்

வாரத்திற் கொருமுறை வேலை செய்த நாட்களினடிப்படையில் நாளொன்றுக்கு மூன்று ரூபா வழங்கப்படுகிறது.

## ஊ. சே. நிதி.

ஊழியர் சேமலாப நிதி சம்பளத்தில் 8% பிடித்துக்கொள்ளப்படுகிறது.

இலங்கையிலிருந்து செல்லும் அகதிகள் (இவ்வாறே அங்கு கூறப்படுகிறது) குடும்பம் ஒன்றுக்கு இரண்டு பேருக்கு மட்டுமே தோட்டத்தில் வேலை வழங்கப்படுகிறது.

## சுகாதார குடியிருப்பு வசதிகள்

மலசல கூடங்கள் இல்லை. நீர் விநியோகமும் திருப்திகரமாக இல்லை. போதிய குடியிருப்பு வசதி இல்லாத காரணத்தால் அகதிகள் பள்ளிக் கட்டிடம் – பிள்ளைக் காம்பரா- உரசேமிப்புக்கட்டிடம் - வாகன நிறுத்துமிடங்களை ஆக்கிரமிப்பு செய்து கொண்டுள்ளனர்.

## கல்வி

5ம் வகுப்புவரை தோட்டத்தில் கல்வி கற்றபின் நகரத்திற்கு உயர் கல்விக்குச் செல்லும் தொழிலாளியின் பிள்ளைக்கு 15 ரூபா பஸ் கட்டணமாக வழங்கப்படுகிறது. ஹரிசன பிள்ளைகளுக்கு இலவசப் பாட புத்தகங்கள் கிடைக்கின்றன.

உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு நகரப் பாடசாலை செல்ல வாகன வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

—13ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11ம் பக்கத் தொடர்ச்சி......

## கொடைக் கானல்...

ரர்களுக்கு வேலைக்கு ஆள் திரட்டிக்கொடுக்கும் தரகர்கள் பலர் தமிழ் நாட்டின் பல இடங்களிலும் இருக்கின்றனர். இவர்கள் அந்த நாளில் இலங்கைக்கு 'ஆள்கட்டி' கொண்டுபோன மாதிரி இங்கும், ஏற்கனவே புனர்வாழ்வு முறையாகக் கிடைக்காது தடுமாறும் அகதிகளைக் கொடைக்கானலுக்கு அழைத்து வருகிறார்கள். முன் பணம் போன்றவற்றைத் தாராளமாகக் கொடுத்து வேலை தருவதாகவும் தகுந்த கூலி தருவதாகவும் கூறி கூட்டி வருகிறார்கள்.

அப்படி வந்தவர்கள் தரகர்களிடம் பட்ட கடனை அடைக்க முடியாமல் குறைந்த கூலிக்கு சிறைக் கைதிகளைப் போல,— கொத்தடிமைகளாக வாழும் பரிதாப நிலையைக் காணும் எவர் மனதும் கசிந்துருகவே செய்யும்.

## வீட்டு வசதி—கல்வி—மருத்துவம்

பிழைப்புக்கு வேலை கிடைத்தால்-வயிற்றுக்குக் கஞ்சி கிடைத்தால் போதும் என்ற நிலையிலேயே வாழும் இவர்களுக்கு அடுத்த நாள் என்பது கேள்விக்குறி! நிரந்தரமான வீடு வாசல் இல்லை; கிழங்கு பண்ணைகளில் தற்காலிகக் கீற்றுக் கொட்டகைகள்; பத்துக்கு ஆறடி கொண்ட இக்கொட்டகைகளுக்குள் தான் குடும்பமே, 10 பேர் என்றாலும் வசிக்க வேண்டும். சிறிய காற்றுக்கே கீற்றுக்கள் வானத்தில் பறந்துவிடும். மீண்டும் இவர்களே கொட்டகைகளை தங்கள் செலவில் அமைத்துக் கொள்ள வேண்டும். கல்வி வசதி என்ற பேச்சுக்கே இடம் இல்லை. கொடைக்கானலுக்கு இந்த மலைப் பிரதேசங்களிலிருந்து தூரம் 20 மைல். உணவுப் பொருட்கள் மற்றும் தேவைகளுக்கு கொடைக்கானலுக்கே வரவேண்டும். ஒரே ஒரு பஸ் சேவையில் உள்ளது. அதில் சென்றாலும் 6, 7 மைல் காட்டினுள் நடந்தே ஆகவேண்டும்.

இப்பகுதியில் வாழும் 20,000 பேரும் நோய்களால் பீடிக்கப்பட்டால் உடனடியாக உயிர்வாழ கடவுளைத்தவிர வேறு யாரையும் நாடமுடியாது. பிறப்பு, இறப்பு எதுவுமே பதியப்படுவதில்லை. இலங்கையில் தாங்கள் வளர்த்த நாய்கள் கூட இந்த வாழ்க்கை வாழ்ந்ததில்லை என விம்முகிறார்கள் இங்குள்ளவர்கள்.

துன்பக்கேணியில் வீழ்ந்து தவிக்கும் இவர்களின் மறுவாழ்வு உயிர் வாழத்துடிக்கும் போராட்டமே! நேசன்

12 ம் பக்கத் தொடர்ச்சி......

## சேரம்பாடியில்...

### தேயிலை

இத்தோட்டத் தொழிலாளருக்குப் பாவனைக்கு தேயிலை இலவசமாகவோ, பணத்திற்கோ வழங்கப்படுவதில்லை. வெளிச் சந்தையிலேயே பெற்றுக்கொள்ள வேண்டும்.

### தொழிற்சங்கம்

1 தாயகம் திரும்புவோர் காங்கிரஸ்
2 நீலமலை தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய இரு தொழிற் சங்கங்கள் இங்கு இருக்கின்றன.

எனது குழுவின் மற்றவர்கள் ஏனைய விபரங்களைத் தரஉள்ளதால் எனது குறிப்பை இத்துடன் குறுக்கிக் கொள்கிறேன். எனக்கு இந்த சந்தர்ப்பம் அளித்த கி. தொ.ஒ. விற்கு எனது நன்றி!

---

9ம் பக்கத் தொடர்ச்சி .....

## இரு கொடி......

கேட்பதற்கு இப்போது வலுவான சங்கம் கிடையாது. வழக்கு அட்டன் கோட்டில் ஒரு வருடம் ஓடி கண்டிக்கு மாற்றப் பட்டு தீர்ப்பும் வழங்கியாகி விட்டது. இரண்டு பேருக்கு ஆயுள் தண்டனை: மூவருக்கு தலா இரண்டு வருட சிறைத் தண்டனை: இந்தத் தீர்ப்பை ஒரு சங்கம் எதிர்த்து வாதாடுகிறதாம்; இந்த தீர்ப்புதான் சரியான தீர்ப்பு என்று ஒரு சங்கம் திருப்தி தெரிவித்துள்ளதாம்,

எப்படியும் தேயிலைமலைத் தோட்டத்தில் இரண்டு கொடிகள் பறந்தே தீரும்!

காலப் போக்கில் இரு கொடிகள் பல கொடிகள் ஆனாலும் ஆச்சரியப் பட முடியாது.

---

10ம் பக்கத் தொடர்ச்சி......

## மீண்டும் தொடரும்...

இந்தியாவில் அகதிகளைக் கவரத்தக்க திட்டங்கள் குறைவாக இருப்பதும் – குடிபெயர்ந்து செல்வோருக்கு அங்கு ஏற்படுகின்ற கஷ்டங்களும் இலங்கையில் பொதுவாகக் கிடைக்கும் நல்ல வாழ்க்கை வசதிகளும் அதிகாரிகள் அலுவலர்களினால் கொடுக்கப்படும் தொல்லைகளுமே சமீபத்திய வருடங்களில் தாயகம் திரும்புவோரின் தொகை குறைந்து வருவதின் காரணமாகக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர்வாழ்வுப்பிரச்சினைகள்

ராதா மணாளன்

இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து வரும் இந்திய வம்சாவளியினரின் புனர்வாழ்வுக்கென இந்திய மத்திய மற்றும் மாநில அரசுகள் பெருமளவு நிதியைச் செலவிட்டு திட்டங்கள் தீட்டியுள்ளன. இவ்வுதவிகள் அனைத்தும் உரியவர்களுக்கு உரிய அளவில் போய்ச் சேர்வதில்லை. இவ்வரசாங்கங்கள் உதவிகள் செய்தாலும் அவைகள் குறைபாடுடையதாகவே உள்ளன. இந்நிலைமை; அரசாங்கம்தான் பொறுப்பை தட்டிக்கழித்து விடுவது போலுள்ளது. இறுதிவரை புனர்வாழ்வுத் திட்டங்கள் மேற்பார்வைசெய்து அமுல் நடத்துவதில்லை. தேவைப்படுபவர்களுக்கு உரிய காலத்தில் உதவிகள் செய்வதில்லை. அதிகாரிகளின் ஒழுங்கீனம் தரகர்களின் ஏமாற்றுதல் மற்றும் பல நிர்வாகக் குறைபாடுகள். இத்திட்டங்களைப் பயனறச் செய்து விடுகின்றன. இவைகளையும் இதுவரை அரசாங்கம் மேற்கொண்டுள்ள உதவித் திட்டங்களின் மீதான ஒரு சிறு ஆய்வை இக் கட்டுரையில் எடுத்துரைப்பதன் மூலம் இனிமேல் இலங்கையிலிருந்து வரும் மக்கள் தம் புனர் வாழ்வுக்கான வாய்ப்புகளை எவ்வாறு நாடலாம் என்று ஓரளவாவது வழிகாட்டலாம் என்ற நம்பிக்கையுடன் இதை எழுதுகிறேன்.

இலங்கையிலிருந்து இதுவரை (16-6-80) 82,724 குடும்பங்களைச் சார்ந்த 3,37,457 பேர் குடியேறியுள்ளார்கள். இதில் 2,62,428 பேர் தான் ஒப்பந்த எண்ணிக்கையில் அடங்குவர் எஞ்சிய 74,923 பேர் இம்மக்களின் இயற்கையான அதிகரிப்புகள். இவர்களின் பின் வரும் விபரப்படி புனர்வாழ்வுத் திட்டங்களில் குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்கள்:—

| | |
|---|---|
| அரசு தேயிலைத் தோட்டங்களில் | 1996 |
| அரசு இரப்பர் தோட்டங்களில் | 234 |
| அரசு சிங்கோனாத் தோட்டங்களில் | 125 |
| அரசு பண்ணைக் கார்ப்பரேசனில் | 791 |
| நெசவு ஆலைகளில் | 1827 |
| நிலக்காலனித் திட்டங்களில் | 2161 |
| வியாபாரக் கடன் அளிக்கப்பட்டவர்கள் | 42188 |
| நெசனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேசன் | 125 |
| அகதிகள் கூட்டுறவு வங்கியின் உதவியால் வேறு அல்லது பிற உதவி பெற்றோர் | 2814 |
| ஏனைய மாநிலங்களில் (தோட்டங்கள்) | 506 |
| பிற உதவிகளைப் பெற்றவர்கள் | 2542 |

16-6-80 வரை மண்டபம் முகாமில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 7 அங்கத்தவர் மட்டுமே உதவி அளிக்கப்படாது இருந்தார்கள். இத்தகைய உதவிகளைப் பெற்றவர்கள் மொத்தம் 55209 குடும்பத்தினர். ஏனைய 27514 குடும்பத்தவர்கள் அரசாங்கத்தின் உதவியை நாடாதவர்கள் அல்லது அரசின் உதவி கிட்டாதவர்கள். இவர்கள் தாம் விரும்பிய இடங்களுக்குச் சென்று குடியேறிவிட்டவர்கள். இவர்களில் சுமார் 10 அல்லது 15 குடும்பத்தவர்கள் மட்டுமே தமக்கென ஒரு நிலையான வாய்ப்பை அமைத்துக்கொண்டவர்கள். ஒரு சிலர் அரசு வேலைகளில் வயது வரம்பு தவிர்ப்பு தவிர எந்த விதமான சலுகைகளுமின்றி உள்ளூர் போட்டியாளர்களுடன் போட்டியிட்டு இந்திய மண்ணின் சவால்களைச் சமாளித்துச் சேர்ந்தவர்கள். ஏனைய அனைவரும் இருக்க நிரந்தரமான வீடுமற்று நாளாந்த கூலிக்காக நிச்சயமற்ற வாழ்க்கை வாழ்பவர்கள். இதில் பலர் நாடோடிகளாக இடம் விட்டு இடம் சென்று வாழ வசதி தேட வேண்டிய நிர்ப்பந்த நிலையிலுள்ளவர்கள்.

புனர்வாழ்வு உதவிகள் அளிக்கப்பெற்ற மக்களில் நிரந்தரமான வாழ்க்கையை நடத்துபவர்கள் அரசு, தேயிலை, ரப்பர், சிங்கோனாத் தோட்டங்கள், அரசு பண்ணைக் கார்ப்பரேசன், நெசவுகள், நேசனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேசன், பிற மத்திய மாநில அரசு நிறுவனங்கள் என்பவற்றில் புனர் வாழ்வுக்காக அனுப்பப்பட்டவர்களும், பிற மாநிலங்களில் அரசுத் தோட்டங்களில் வேலை கொடுக்கப்பட்டவர்களும் மேற்படி புள்ளி விவரத்துள் அடங்காத தமது சொந்த முயற்சியால் அரசு மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றுள்ளவர்களேயாகும். என்றாலும் இவர்களுக்கும் பிரச்சனைகள் உண்டு. சுமார் 7,8 அங்கத்தவர் உள்ள குடும்பங்களிலும் இரண்டு நபர்களுக்கு மட்டுமே வேலை கொடுக்கிறார்கள் பிற நிறுவனங்களில் குடும்பத்தவர் ஒருவருக்கே வேலை வாய்ப்புண்டு. அதுவும் நெசவு ஆலைகளில் வேலை பெற்றுள்ள குடும்பத்தின் ஒரே அங்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவர் மிகக் குறைந்த வருமானமே பெறுகிறூர் இதை வைத்துக் கொண்டு குடும்பத்தை நடத்துவது சிரமமானதாகும். நியாயமான ஒரு வாழ்வை நடத்துவதற்கு இவ்வருவாய் போதுமானதேயல்ல.

வியாபாரக் கடன்களைப் பெற்றவர்கள் தான் அதிகமாக உள்ளார்கள் 42,188 குடும்பங்கள். நிலக்காலனித்திட்டத்தில் குடியமர்த்தப்பட்டவர்கள் 2161 குடும்பங்கள். இவர்கள் தான் எண்ணற்ற இன்னல்களுக்குள்ளானவர்கள். இவர்களில் சுமார் 95 வீத மக்கள் இத்திட்டத்தால் பயனேதும் பெறவில்லை. இன்று நாடோடிகளாக வாழ்பவர் இவர்களுள் பலர். வியாபாரக்கடன் பெறும் இவர்கள் இலங்கையில் தோட்டத் தொழிலாளர்களாக இருந்தவர்கள். வியாபாரத்துறையில் எந்த விதமான முன் அனுபவமும் இல்லாதவர்கள். மேலும் வியாபாரக்கடனை இவர்கள் பெறுவதற்கு, பல முறை அரசு அலுவலகங்களுக்குப் படை எடுக்கவேண்டும், தரகர் மூலமே அனுபவப் பழக்கப்பட்டு விட்ட இவர்கள் இங்கும் தரகர்களையே நாடுகிறூர்கள். இத்தரகர்கள் பலர் இலங்கையிலிருந்து திரும்பியோரே. இவர்களுக்கு கமிஷனுகவும் ஏனைய செலவுகளுக்காகவும் கிடைக்கும் கடனில் 50 வீதம் செலவிடப்பட்டு விடுகிறது. எஞ்சியது இதுவரை வாழ்வதற்காக வாங்கிய கடன்களை அடைப்பதில் செலவிடப்படுகிறது. எனவே பலர் வியாபாரத்தில் ஈடுபடுவதில்லை: ஈடுபட்ட ஒரு சிலரும் ஏற்படும் நஷ்டங்களைத்தாங்க முடியாது வியாபாரத்தைக் கைவிட்டுவிடுகிறூர்கள். இலங்கையில் வியாபாரத் துறையில், ஈடுபட்டிருந்த சிலரும் கூட பெரும் நஷ்டங்களை யடைந்து வியாபாரத்தைக் கைவிட்டுவிடுகிறூர்கள். வியாபாரத்தில் தொடர்ந்து ஈடுபடாததால் இரண்டாம் மூன்றும் தவணைக்கடன்களையும் பெற முடிவதில்லை: கடன் சொல்வதிலும், ஊழல்கள் ஒழுங்கீனங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. குறிப்பிடத்தக்க வசதி படைத்தோரும் கடன் பெற்றுள்ளார்கள். இது விதிகட்கு முரணுனது.

நிலக்காலனித் திட்டங்களில் குடியமர்த்தப்பட்டவர்களும், இன்னலை அனுபவித்து வருகிறூர்கள். இந்நிலங்கள் இதுவரை எவருமே பயன் படுத்த முடியாததால் கைவிடப்பட்டவை. இவற்றில் எவ்வித விவசாயமும் செய்யவியலாது. தரிசு நிலங்கள் – வளமற்றவை பாசன வசதியில்லை. இந்தக் காலனிகளிலும் பல வீடுகள் இன்று வெறுமையாகவே உள்ளன. வாழ வசதியற்று பலர் வெளியேறிவிட்டனர். இத்தகைய ஒரு காலனியான புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் காலனியில்தான் 1974ம் ஆண்டு பஞ்சத்தின் போது சுமார் 42 பேர் இறந்ததாகக் கூறப்பட்டது.

இவ்வாறு நிலக்காலனி வியாபாரக் கடன் என்பவைகளைப் பெற்றவர்கள் கிராமப்பகுதியில் விவசாயக்கூலிகளாக அல்லது மலைப்பிரதேசங்களில் தொழிலாளர்களாக வாழ்கிறூர்கள். இவர்களுக்கு நிரந்தரமான தொழில் இல்லை. போதிய வருவாயில்லை. பல சந்தர்ப்பங்களில் உரிய கூலி பெறமுடியாமல் ஏமாற்றப்படுகிறூர்கள். இத்தகைய கூலிகளாகப்போகிறவர்கள் ஏற்கனவே அங்குள்ள உழைப்பவர்களுடன் சேர்வதால் உழைப்பாளர் தொகை அதிகரித்து தொழில் வாய்ப்புக் குறைகிறது. எனவே கூலியையும் குறைத்துவிடுகிறூர்கள். இந்நிலை பொதுவாக மலைப் பிரதேசங்களில் காணப்படுகிறது. மேலும் எல்லாக் காலத்திலும் தொழில் கிடைப்பதில்லை. விவசாயக் கூலி ஒரு பருவ காலத்தொழில்: மழைக் காலங்களிலும் பாசன வசதி கிடைக்கும் காலங்களிலுமே நிலம் விவசாயம் செய்யப்படுவதால் பிற்காலத்தில் தொழில் வாய்ப்பு இருப்பதில்லை.

இத்தகைய வாழ்வியல் வசதிகளைவிட பொதுவாகக் குழந்தைகள் கல்வி போன்ற விடயங்களிலும் இவர்களுக்கு அளிக்கப்படுவதாகக் குறிப்பிடப்படும் வாய்ப்புகளும் கிடைக்கவில்லை வீடு கட்டித் தருவது போன்ற விடயங்களிலும் தரகர்களால் மிக மோசமாக ஏமாற்றப்படுகிறூர்கள். இது போன்ற பல குறைபாடுகளை தனியாகவும், ஸ்தாபன ரீதியாகவும் அரசுக்கு முறைப்பாடுகள் தெரிவித்தும், அரசு உரிய முறைப்படி அவைகளைக் கவனிக்கவில்லை.

குடிபெயர்ந்தவர்களுக்கு புனர்வாழ்வுக்காக அரசு பெருமளவு நிதி ஒதுக்கியும் அதில் சுமார் 75 சதவீதம் நிர்வாகச் செலவினங்களுக்காக செலவிடப்பட்டு விடுகிறது. சுமார் 25 சதவீதம் மட்டுமே அவர்களுக்கு உதவியாகக்கிடைக்கிறது. இப்பணத்திலும் அரைப் பகுதியை, நிதியுதவியைப் பெறும் வழிகளில் செலவிட்டு விடுகிறூர்கள். எனவே அரசு நிதி ஒதுக்குவதன் முழுப்பயனையும் இவர்கள் பெறுவதில்லை. பெற முடிவதில்லை.

நிரந்தரமான வேலைவாய்ப்பு பெற்றவர்களே ஓரளவாவது நிரந்தரமான வாழ்வை அமைத்துக்கொள்ள முடியுமாகையால் கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடல் நீர் ஏன் உப்பானது?

( கவிஞர்—கருணானந்தம் )

கடல் நீர் தான் உப்பாக இருப்பதற்குக்
காரணத்தைக் கூற வந்த அறிஞர் அண்ணா
''கடல் கடந்த தமிழ் மக்கள் இற்றை நாளில்
கரைகாணாத் துயர்மூழ்கி வடிக்கும் கண்ணீர்
கடல் நீரில் கலந்ததினால்'' என்று ரைத்தார்:
கற்பனைதான் எனினுமதிற் பொதிந்திருக்கும்
குடல் நடுக்கும் நிலைமையெல்லாம்
எண்ணிப் பார்ப்போம்
கொடுமைகளைக் களைவதற்கே
வழிகள் காண்போம்

❋❋❋❋

குடும்ப நலத் திட்டங்கள் இல்லா நாளில்
குறைவின்றிக் குழந்தைகளைப்
பெற்றுப் போட்டுப்
படுந்துன்பந் தாங்காமல் கப்பல் ஏறிப்
பர்மாவில் மலாயாவில் இலங்கைத் தீவில்
கடுமுழைப்பால் காடுகளை வளமாய் ஆக்கிக்
கவலையின்றி அம்மக்கள் வாழு மாறு
நெடுங்காலம் நிலைத்தவர்க்கும் உரிமையின்றி
நெருக்கடியால் விரட்டுகிறார்;
கொடுமை அந்தோ!

❋❋❋❋

உழைப்பிலே உன்னதமாய் உயர்த்தி வந்த
ஒங்கு புகழ்த் தமிழ்க்குடிகள் உயிரைகாத்துப்
பிழைப்பதற்குத் தாய்நாடு மீள்வதன்றிப்
பிறிதொரு நல் மார்க்கந்தான்
உண்டோ? அங்கே
தழைப்பதற்குப் பாடுபட்டும்
நன்றி கொன்றோர்
தாக்குதலால் மாள்வதுதான் வழியா?
என்றே
அழைப்பை யெதிர் பார்க்கின்றார் என்ன
செய்வோம்?
அங்கிருந்து வருபவரை வாழ வைப்போம்!

❋❋❋❋

நன்றி: மக்கள் மறுவாழ்வு – திருச்சி

## — இக்கரைக்கு அக்கரை பச்சை —

குறிஞ்சி தென்னவன்

உழைத் துழைத்து தேய்ந்து போன
துடைப்பக் கட்டையாக
உசிர மட்டும் எடுத்துகிட்டு
இந்த ஊரு வந்தோம்!

தாயி நாடு என்று பெரும்
சந்தோசத்தில் வந்தோம்!
பாயி கூட இல்லாமலே
படுத்திருக்கோம் தெருவில்!

'லோனெ'டுத்து கடையை வச்சி......
ரொம்ப ஆசை பட்டோம்: இன்று
லோனு மில்லே, கடையுமில்ல
ரோட்டளந்து கெட்டோம்!

வீடுகட்ட கிணறு வெட்ட
லோனெடுத்தான் கருப்பன் இப்ப
வீடுமில்ல கிணறு மில்ல
வீதியிலே இருக்கான்!

தாய் நாட்டில் நிம்மதியா
வாழ்வோ மின்னு வந்தா... அட
நாய் நரியர் நம்ம சத்தி
புடுங்குறுங்க இங்கே!

சொந்த நாடு தஞ்ச மென்று
வந்து விட்டோம் மச்சான்! அட
எந்தப் பக்கம் திரும்பி னாலும்
கேக்குறுங்க லஞ்சம்!

வாரவுங்க நாலு தொழில
கத்துகிட்டு வந்தா... ஏதோ
வயித்துப் பாட்டு பிரச்சினையை
தீர்த்துக் கலாம் மச்சான்

இக்கரைக்கு அக்கரையில்
இருக்கும் பச்சை...... கதையை
இனியு மிங்கு வாரவுங்க
தெரிஞ்சிக் கணும் மச்சான் !

---

யில் புனர்வாழ்வுக்கு சிபாரிசு செய்யப்படும் போது வேலைவாய்ப்பை மட்டுமே சிபாரிசு செய்யக் கோருங்கள். சுயமாக வாழ்வை அமைத்துக்கொள்வோருக்கு இதுதான் ஏற்றது.

புனர் வாழ்வுக்கு சிபார்சு செய்து அளிக்கப்படும் விபரங்களை சரியாகப் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள். பலருக்கு அங்கு என்ன எழுதப்பட்டுள்ளன என்பது இங்கு வந்த பின்னும்கூட தெரிந்திருப்பதில்லை, சில தொழிலாளர்கள் மில்களுக்கு வேலைக்கு பரிந்துரைக்கப்பட்டும் அவற்றுக்குச் செல்லாது தமது பாரம் பரிய கிராமங்களுக்கு வந்து சிரமப்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்

## குறுக்கெழுத்துப்போட்டி இல. 1

### பரிசுபெறுவோர்:

1ம் பரிசு: V. தாமோதரன்,
சென் மேரிஸ் பாடசாலை, பொகவந்தலாவ

2ம் பரிசு: V. செந்தில்குமாரன்
திருத்துவக் கல்லூரி, கண்டி

3ம் பரிசு: R. செந்தில்நாதன்
ஹைலன்ஸ் ம. வி. அட்டன்

### சரியான விடை எழுதியோர்:

1. ஆ. முத்துகுமாரசாமி,
அருணாசலம் வித்தியாலயம், அளவெட்டி

2. ரவி. ஆறுமுகம்,
லெமிலியர் தோட்டம், தலவாக்கொலை

3. P. பாலசுப்பிரமணியம்,
முள்ளுகாமம் மே. பி. மஸ்கெலியா

4. P. அலெக்சாந்தர், C/o சூசைமாணிக்கம்
சென் என்றூஸ் கீ. பி. மஸ்கெலியா

5. கு. சந்திரகுமார், C/o. Dr. S K. நாதன்
சென்ரல் டிஸ்பென்சரி, மஸ்கெலியா

6. D. கிருபாகரன் மே/பா துரைசாமி,
160, பிரதான வீதி, மஸ்கெலியா

7, ரவீந்திரன் சின்னையா,
மேரிகோல்ட் எஸ்டேட், கந்தப்பளை

8. G. சூசை சகாயம்,
சென் ஜோசப் த.ம.வி. மஸ்கெலியா

9 S. பிரபாகரன்,
சென் தோமஸ் கொலேஜ், மாத்தளை

10. டயனாதேவதர்சினி,
56/1 கடுகன்னாவ வீதி, கம்பளை

11. யோகேஸ்வரன் நடராஜா,
15/3, குமாரசிங்க வீதி, பதுளை

12. R. அருச்சுனன்,
டெஸ்போட் குரூப், நானுஓயா

13. M. நரசிங்க பெருமாள்,
கெடஸ் டிவிசன், மறே S.P. மஸ்கெலியா

14. C. R நளினா C/o. C. ராமநாதன்,
பிட்டன் வீன் டிவிசன் மேபீல்ட், அட்டன்

15. ஹிமாஷினி சதாசிவம்,
C/o. மகேஸ் சதாசிவம்,
JEDB. மாநிலக்காரியாலயம், நுவரெலிய

16. M. அப்பர்சாமி
முள்ளுகாமம் ப.க, மஸ்கெலியா

17. S. மருதை
நல்லதண்ணி த.வி. மஸ்கெலியா

### ஓரளவு சரியான விடை தந்தோர்

M. விஸ்வநாதன்,
C.H அல்பியன் தோட்டம், பொரகஸ்
மலையரசி, V. மூக்கப்பிள்ளை,
1-3, மெயின் வீதி, சாமிமலை
R மனோரஞ்சிதம், C/o. S.ராமசாமி
கெளனி தோட்டம், மஸ்கெலியா
ஆ. குமாரராஜா,
த.ம. வித்தியாலயம், இறம்பொடை

மாணவர்கள் கவனிக்க!

மாணவர் குறுக்கெழுத்துப் போட்டிக் கூப்பனைப் பூர்த்தி செய்தும் பெயர் முகவரி எழுத சிலர் மறந்து விட்டிருக்கின்றனர். மாணவர்கள் பெயரில் சில தாத்தாக்களும், பாட்டிகளும் கூட கூப்பனை நிரப்புவதாகத் தகவல்கள் கிடைத்திருப்பதால் இனிமேல் மாணவர்கள் தங்கள் பாடசாலை முகவரியை மட்டுமே குறிப்பிட வேண்டும்.

---

கிறார்கள். மண்டபம் முகாமில் அதிகாரிகளும் இது போன்ற நிகழ்ச்சிகளுக்கு உடந்தையாக இருக்கிறார்கள்.

புனர்வாழ்வு பெற்றுக்கொண்டு இங்கு வந்ததும் இயன்ற வரை உள்ளூர்வாசிகளுடன் இணைந்து வாழ முயலுங்கள். குடிபெயர்ந்தோர் உள்ளூர் மக்களின் பிரச்சனைகளுக்காகவும் உள்ளூர் வாசிகள் குடிபெயர்ந்தோர்களுக்காகவும் போராடும் சூழ் நிலை ஏற்பட வேண்டும். அல்லது இலங்கையில் இருந்ததைப்போலவே நாம் தனிமைப்படுத்தப்பட நேரிடும். இத்தகைய தனிமையே பல கட்டங்களிலும் இருப்பவரிடையேயும் மோதலை அல்லது முரண்பாட்டை ஏற்படுத்தலாம். எனவே இந்தியர்களிடமிருந்து தனிமைப்படுத்தப்படும் நிலையை விரும்பாதிர்கள் இணைந்து வாழ்வது எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதாலும் எளிதான சூழலை உருவாக்கும். ஆந்திர மாநிலத்திலுள்ள குண்டக்கல் என்ற இடத்தில் குடி பெயர்ந்தோருக்கு இன்னல்கள் ஏற்பட்டபோது உள்ளூர் மக்கள் போராட முன்வந்தது எடுத்துக்காட்டாகும். இதுதான் ஒரு சுமுகமான சூழலை உருவாக்கும்.

# தோட்டத் தொழிலாளருக்கு வரப்பிரசாதம்

## (நுவரெலியா) இலங்கை விவசாய சங்கம்

ஓசைப் படாமல் நுவரெலியாப் பகுதி தோட்டத் தொழிலாளர்களுக்குப் பயனுள்ள சேவையை கடந்த மூன்றாண்டுகளாக இலங்கை விவசாய சங்கம் செய்து வருகிறது.

தோட்டத் தொழிலாளர்கள், அரசு வழங்கும் 'விவசாயக்கடன்' மற்றும் 'உருளைக் கிழங்கு கடன்' போன்றவைகளைப் பெறுவதில் பலவித முட்டுக் கட்டைகளும் சிக்கல்களும் சிரமங்களும் இருந்து வந்தன, தங்களைச் சுற்றியுள்ளவர்கள் இவைகளைப் பெற்று சுகமனுபவித்து வந்தும் உழைக்கத் தயங்காத நம் தொழிலாளர் கூட்டத்தை உதவி செய்து கைதூக்கி விட எவருமே முன்வராதிருந்த போது விவசாயக் கடன் பெற முக்கியமாகத் தேவைப்படும் 'கமநல அட்டை' (Agro Identity Card) வங்கிப் பிணை ஆகியவைகளை இச் சங்கம் தொழிலாளர்களுக்கு முன்னின்று எடுத்துக்கொடுத்து இந்த வருடம் (1980 ஜனவரி) 75 குடும்பங்களுக்கு ஆளுக்கு 3 அந்தர் உருளைக்கிழங்கு வீதம் ரூ 2000/- கடனைப் பெற்றுக்கொடுத்தது.

சரியாக மூன்று மாதங்களின் பின் 75 குடும்பங்களும் உருளைக்கிழங்கு அறுவடையின் முடிய கடனை முழுவதும் திரும்பச் செலுத்தி வங்கியில் ஓர் சாதனையையே நிலை நாட்டிவிட்டனர். கடன் வழங்கி ஒரு வருடம் இரண்டு வருடமென திரும்ப வசூலிக்க படாத பாடு படும் வங்கிக்கு,தோட்டத் தொழிலாளர்களின் இந்த நாணயம் மிக்க செயல் நம்பிக்கையை ஊட்டியதன் பயனாக இப்போது தோட்டத் தொழிலாளர்களுக்கு கடன் வழங்குவதில் எவ்வித தயக்கமுமின்றி முன் வர முடிகிறது.

இக்குறிப்பிட்ட விளைச்சலில் ரூ 4000/- வீதம் ஒவ்வொருவரும் வருமானம் பெற்றது குறிப்பிடத் தக்கது, நுவரெலியாப் பகுதிக்கு சரித்திரத்தில் முதன் முறையாக 'விவசாய அபிவிருத்திக் குழுவிற்கு' இச்சங்கத்தின் மூலம் திரு. V, கதிர்வேல் என்ற தொழிலாளி நியமிக்கப்பட்டுள்ளார்.

1977ம் ஆண்டு ஒக்டோபர் 15ம் திகதி நுவரெலியாவில் சுமார் 130 உறுப்பினர்களோடு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் தற்போது எழுநூறு உறுப்பினர்களுக்கும் மேல் கொண்டுள்ளது. 'சர்வதேச விவசாய பெருந்தோட்ட சம்மேளனம்' இச்சங்கத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது, கடந்த இரண்டு வருடத்தில் இச் சம்மேளனம் நடத்திய விவசாயம் பற்றிய கருத்தரங்கில் 4 பேர் இச் சபை மூலம் இந்தியா சென்று கலந்து திரும்பினர்.

1980க்கான இரு கருத்தரங்குகள் இலங்கையில் நடக்க இருக்கின்றன. ஒரு பெண் தொழிலாளி இந்தியாவில் ஒரு கருத்தரங்கில் கலந்து கொள்ள சமீபத்தில் இச்சங்கம் மூலம் செல்ல இருக்கின்றார். கால் நடை வளர்ப்புக் கடன்களும், இச்சங்கம் தொழிலாளர்களுக்கு பெற்றுத் தருவதில் உதவுகிறது. இச்சங்கத்தின் நடவடிக்கைகளினால் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் தொழிலாளர்களின் கிழங்குச் செய்கைகளை நேரில் சென்று அவதானித்து போதிய ஆலோசனைகளை வழங்கினர். மைசூர் பருப்பு பயிரிட பரீட்சார்த்தமாக நுவரெலியா தொழிலாளர்களுக்கு விதைகள் வழங்கவும் ஏற்பாடாகியுள்ளது. இச்சங்கமே நேரிடையாக கடன் வழங்கும் திட்டமும் இருப்பதாகத் தெரிகிறது.

திரு. எம். எஸ். செல்லச்சாமி தலைவராகவும், திரு. எம். மாதவன் செயலாளராகவும் திரு. ஐ. வீ. செல்வநாயகம் பொருளாளராகவும் உள்ள இச்சங்க அலுவலகம்; இலக்கம் 10, லேடி மக்கலம் ட்ரைவ், நுவரெலியா என்ற முகவரியிலுள்ளது. திரு. கிருபளானி அமைப்பாளராகக் கடமையாற்றுகிறார்.

அன்பிலே நண்பனை வெற்றி கொள்;
களத்திலேள திரியை வெற்றி கொள்;
பண்பிலே சபையை வெற்றி கொள்:
மஞ்சத்தில் மனைவியை வெற்றிகொள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளரைச் சுரண்டும் சங்கங்கள்;

# தமிழகத்திலும் தொடர்கின்றன

பல ஆண்டுகளாக இலங்கையில் சங்கங்களால் ஏமாற்றப்பட்டு எந்த நன்மையும் பெறுமல் இந்தியா செல்லும் 'அகதிகள்' ராமேஸ்வரதில் வைத்தே சந்தா வசூலிக்கும் சங்கங்களிடம் ஏமாறுகிறுர்கள்.

தமிழகத்தையே தம் வாழ் நாளில் பார்த்திராத அகதிகள் ராமேஸ்வரத்தில் செய்வதறியாது திகைத்து நிற்கும் நிலேகளைப் பயன்படுத்தி கடன் பெற்றுத்தருகிறேம் – டிரபட் மாற்றித்தருகிறேம் – வீடு கட்ட – தொழில் பெற்றுத்தர ஆவன செய்து தருகிறேம்! என பல்வேறு வாக்குறுதிகளேயும் சரமாரியாக அள்ளித் தெளிக்கும் சங்கத்தாரிடம் அப்பாவி அகதிகள் வசமாகச் சிக்கிக் கொள்கிறுர்கள்.

கவர்ச்சியான பெரிய பெயர்ப்பலகையுடன் அமைந்து இருக்கும் சங்க அலுவலகத்தைப் பார்க்கும் பலர் இயற்கையாகவே அவர்கள்மீது நம்பிக்கை வரப் பெற்று விடுகின்றனர் வலேயில் சிக்கியதும் நபர் ஒருவருக்கு ரூபா ஒன்று வீதம் 12 ரூபா ராமேஸ்வரத்திலேயே வசூலிக்கப்பட்டு விடுகின்றது; 10 பேர் ஒரு குடும்பத்தில் இருந்தால் 120 ரூபா உடனே சங்கத்திற்கு சந்தா கிடைத்து விடுகிறது. பின்னர் பல்வேறு இடங்களிலும் உள்ள தங்கள் கிளேகளுக்கு அகதிகள் டிரன்ஸ்பர் ஆகும் நிகழ்ச்சிகளும் உண்டு. சில சங்கங்கள் குறிப்பிடத்தக்க சேவை செய்து வருவதையும் மறுப்பதற்கில்லே.

இரு வார சுற்றுப் பயணத்தில் சுமார் ஏழு சங்கங்களேப்பற்றி ஓரளவு அறிந்துகொண்டதில் சுவையான பல தகவல்களேப் பெற முடிந்தது. குறிப்பாகக் கீழ்க் கண்ட சங்கங்கள் 'அகதிகள்' மத்தியில் தங்கள் தொழிலே செய்து வருகின்றன. இதைவிட இன்னும் பல சங்கங்கள் தங்கள் பிழைப்பை நடத்தி வருகின்றன எனவும் தெரிந்து கொள்ள முடிந்தது.

## தாயகம் திரும்பியோர் ஐக்கிய முன்னணி சம்மேளனம் ( UFFR )

இது மதுரையில் தலைமை அலுவலகத்தைக் கொண்டு இயங்கி வருகிறது. மண்டபம் முகாம், திருச்சி, புதுக்கோட்டை, பந்தலூர் கோத்தகிரி, கீழ் கோத்தகிரி, கூடலூர், வால் பாறை ஆகிய எட்டு இடங்களில் கிளேகளே கொண்டிருக்கிறது. இலங்கையில் டிம்புல்ல தோட்ட சேவையாளர் சங்கத்தில் தலைவராக இருந்த திரு A. N அப்பாவு இதன் பொதுச் செயலாளராகவும், நிதிச் செயலாளராகவும், புரஜக்ட் டைரக்டராகவும் இருக்கிறுர்.

இது 1974ல் ஆரம்பிக்கப்பட்டது நொவிப் ஆக்ஸ்போர்ம்' 'ஆபர் வல்வாட்' போன்ற வெளிநாட்டு நிறுவனங்களின் தாராளமான உதவி இச்சம்மேளனத்துக்கு கிடைப்பதாக தனது 1978 & 1979ம் ஆண்டறிக்கையல் குறிப்பிட்டுள்ளது. இதன் செயலாளர் 1978ம் ஆண்டு செப்டம்பரில் மூன்றுமாத பயிற்சி ஒன்றிற்காக 'நொவிப்' நிறுவனத்தின் உதவியுடன் இங்கிலாந்தில் பாமிங்காம் நகரில் உள்ள 'செல்லிஒக்' காலேஜ் சென்று திரும்பி இருக்கிறுர்.

## தாயகம் திரும்பியோர் ஐக்கிய முன்னணி தொழிலாளர் சம்மேளனம் (UFFRW)

பெயரிலிருந்தே முன்னேயதிற்கும் இதற்கும் ஏதோ தொடர்பிருப்பதாக நினேக்கத் தோன்றுகிறதா? ஆம்! கருத்து வேறுபாட்டால் தனிச் சங்கம் அமைத்திருக்கிறுர். முன்னுள் UFFR தலைவர் திரு. M. ரத்னம்: திருச்சி, பெரம்பலூரில் அலுவலகங்கள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைத்திந்திய தாயகம் திரும்பியோர் சம்மேளனம் (AIRF)

கீழ் கோத்தகிரியில் மட்டுமே அலுவலகத்தை உடைய இதன் அமைப்பாளர் திரு A. M. ராஜு இவர் முன்னாள் L-E-W-U பிரதிநிதி இவரை சந்தித்த பொழுது பல்வேறு வேலைகளுக்கு முயன்றதாகவும் தொழில் எதுவும் கிடைக்காத காரணத்தால் இந்த சங்கத்தை ஆரம்பித்ததாகவும் 500 உறுப்பினர்கள் இருப்பதாகவும் 300 ரூபா போல மாதத்திற்கு வசூலாவதை வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்துவதாகவும் கூறினார்.

## தாயகம் திரும்பியோர் தொழிற் சங்கக் காங்கிரஸ்

இது குன்னூரில் இயங்குகிறது. இதன் தலைவர் திரு K. M. சுப்பிரமணியம்.

## நீலமலைத்தோட்டத் தொழிலாளர் சங்கம்

இதுவும் குன்னூரில் இயங்கும் ஒரு சங்கம் இதன் தலைவர் திரு. P. L. பெருமாள்.

இவை இரண்டும் தொழிற் சங்கங்கள். ஆகையால் பெரும்பாலும் தோட்டங்களில் வேலை செய்வோரைப் பற்றியே இவர்களது அக்கரை செல்கிறது. நமக்கு 'அகதிகள்' குறிப்பாகத் தொழிலற்று நிரந்தரமில்லாது இருப்போரை பிரதிநிதித்துவப் படுத்துபவர்களைப் பற்றியதாக இருப்பதால் அது பற்றியே விரிவாக விபரிப்பது நல்லது.

## இலங்கை அகதிகள் சங்கம் ( CERAK ) (Ceylon Repatriates Association Kodaikanal)

அகதிகள் பெரும்பாலும் அவதிப்படும் குமரிக்காட்டுப் பகுதியிலுள்ள சங்கம் இது. அட்டனில் இருந்து சென்ற திரு. செபஸ்டியன் என்பவரும், நுவரெலியாவிலிருந்து சென்ற திரு. அமல்ராஜ் பெர்னாண்டோவும் இதன் செயலாளர் – தலைவர்களாக இருக்கின்றனர். இரண்டு வருடமாக இயங்கிக்கொண்டிருக்கும் இந்த சங்கம் இதுவரை அகதிகளுக்காக பரிதாபப்படுவதைத் தவிர வேறு எதையுமே செய்யவில்லை எனவும் இனிமேல்தான் திட்டமிட இருப்பதாகவும் தலைவரே கூறினார். நொவிப் போன்ற நிறுவனங்களின் உதவி தங்களுக்கும் கிடைப்பதாதக் கூறினார், இவர் நகரில் ஒரு கடை புதிதாக ஆரம்பித்திருக்கிறார், 1 ஏக்கர் பெயர்ஸ் தோட்டமும் குத்தகைக்கு (ஒரு லட்சம் ரூபாவுக்கு) இவரது குடும்பம் எடுத்திருப்பதாகவும் கடந்த வருட உருளைக்கிழங்கு விளைச்சலில் 25,000 ரூபா நட்டமென்றும் கூறினார். செயலாளர் ஒரு வீடு கட்டி முடித்திருக்கிறார். கருத்தரங்குகள் – பயிற்சி வகுப்புகள் நடத்தும் உத்தேசம் இருப்பதாகக் கூறுகிறார்கள்.

## தமிழ்நாடு தாயகம் திரும்புவோர் சங்கம்

இது நீலகிரி மாவட்டத்தில் கோத்தகிரியில் பிரபலமான ஒரு சங்கம். இதன் தலைவர் திரு. கரு. வெற்றிவேல் இவர் ஒப்பந்த காலத்திற்கு முன்பே தமிழகம் சென்றவர். அகதி ஒருவரையே மணம் முடித்துள்ளார். இந்திரா காங்கிரஸின், நீலகிரி மாவட்ட இளைஞர் தலைவர் தமிழக இந்திரா காங்கிரஸ் குழுவிலும் அங்கத்தவராக இருக்கிறார். நீண்ட கால அரசியல் வாதியாக இருப்பதால் தனிப்பட்ட செல்வாக்கு உள்ளவராக இருப்பதை காணமுடிகிறது. நான் சந்தித்த அன்று காலைதான் சிறையிலிருந்து விடுதலையாகிவந்தார். (ஏதோ ஒரு எதிர்ப்புப் போராட்டத்தை முன்னிட்டு இரு நாளைக்கு முன் கைது செய்யப்பட்டாராம்) தனித் தனிச் சங்க நடவடிக்கைகளால் மட்டும் அதாவது அகதிகள் மட்டும் தனித்து நின்று போராடுவதால் எந்த நன்மையுமே பெற முடியாது.

உள்ளூர் அரசியல் சக்தியோடு இணைந்து நின்று போராடுவதே சிறந்தது என்பது இவர் கருத்து.

இவரது முயற்சியால் இலங்கையிலிருந்து சென்றவர்கள் பல்வேறு பகுதிகளில் அரசு நிலங்களில் பலவந்தமாகக் குடியேறி குடிசைகள் அமைத்துக்கொண்டு பின்னர் சட்ட பூர்வமான பட்ட நிலங்களைப் பெற்று நிரந்தரமாக இருப்பதைக் கண்டேன். இப்படிப் பட்டவர்கள் கோத்தகிரியில் மட்டும் 6 இடங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ?க்கு மாகாணத்தில் கல்லாறு கிராமமும்
## கல்லாறு மீன்பிடி அபிவிருத்திச் சங்கமும்

மீனிசை பாடும் வாவியும் தேனிசைத் தமிழின் செழுமையும் சிறப்புற்றோங்கும் மட்டு நகரின் கல்லாறு என்னும் கிராமத்தில் புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் புனர்வாழ்வுப் பணியின் ஓரங்கமாக, இருபது இயந்திர மீன்பிடி படகுகளும், வலைகள் மற்றும் உபகரணங்களும், கல்லாறு மீனவர்களுக்கு கையளிக்கும் வைபவம் சமீபத்தில் கல்லாறு கிராமத்தில் நடைபெற்றது.

Rev. S. K. கதிர்காமர் தனது தலைமையுரையில், 'இறைவன் மனிதனாகப் பிறப்பதே - ஒடுக்கப்பட்ட மக்களின் துயரவாழ்வின் விடுதலைக்காகத்தான். எனவேதான் கிறிஸ்தவ சபைகள் மக்களுக்கு அறியாமை இருளிலிருந்து அறிவொளிபெற பாடசாலைகள் மூலம் கல்வியெனும் ஞானவிளக்கேற்றி சேவை செய்ய-சமய ஸ்தாபனங்கள் – இயக்கங்கள் - வறிய – எளிய - ஒடுக்கப்பட்ட - சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட மக்களின் பூரண சமூக விடுதலைக்காக போராடுவதோடு மட்டுமல்லாது நாளாந்தம் வாழ்க்கைப் பிரச்சினைகளிலும் கலந்து ஆவன செய்கின்றன'.

குறிப்பாக கி. தொ ஒ. இயக்கம், கிராம தோட்ட - நகர்ப்புற – விவசாய - பாட்டாளி மக்களின் விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்டு, பணியாற்றி வருகிறது. எனவே தான் புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் கையறு நிலையைக்கண்டு, ''காலத்தால் செய்த உதவி சிறிதெனினும் ஞாலத்துள் மாணப் பெரிதாக'' மதித்துப் போற்றக்கூடிய இந்த 20 இயந்திரப் படகுகளை கடனுதவி திட்டத்தில் வழங்கியுள்ளது. மற்றும் அரசியல் சமூக, பொருளாதார, கலை கலாச்சாரம் போன்ற இன்னோரன்ன துறைகளிலும் கி. தொ. ஒ.வின் பணி ஒப்பிடற்கரிதாய் உள்ளது. எனவே இந்தப் பணியை தொடர்ந்தும் இங்குள்ள மக்கள் பயன் படுத்திக் கொள்வதோடு மற்ற கிராம மக்களுக்கும் பயன் படக் கூடியவாறு செயற்பட்டுவாழ வேண்டும்



கல்லாறு கிராமத்தில் கி. தொ. ஒ. சார்பாக தோழர் ரஞ்சித் டி சில்வா அவர்கள் சான்றிதழ் வழங்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கூறினர்!

பட்டிருப்பு - பா. உ. திரு கணேசலிங்கம் தனது சிறப்புரையில், மட்டக்களப்பு மாவட்டம் இயற்கை வளங்கள் யாவும் நிறைந்த எழில் மிகு மாவட்டம், புயலுக்குப் பின், அது தனது சோபையை இழந்து விட்டாலும், கடல் வளத்தைப் பொறுத்தவரை முற்றும் அழியாததாகவே இருக்கிறது. மீன் பிடித் துறையில் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரை - அரசு கூட போதிய அக்கறைச் செலுத்தாத நிலையில் கி. தொ. ஒ. அரசுடன் இணைந்து இயந்திரப் படகுகளை வழங்கியமைக்கு பாராட்டுகிறேன்'' என்றார்.

— குறிஞ்சி தென்னவன் —

அவர் படகுகளின் வெள்ளோட்ட நிகழ்ச்சியை குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைக்க, செவ்வண்ணக்காகிதத்தால் சித்திரத் தேராக அலங்கரிக்கப் பட்ட 20 படகுகளிலும் பிரமுகர்களும், பொது மக்களும் கல்லாறு வாவியில் உல்லாச உலாவந்தவர்.

கிழக்கு மாகாணத்திலேயே இவ்வாறான எழிற்காட்சியைக் கண்டுகளித்த பெருமை கல்லாறு மக்களுக்கே உரியது எனும் பூரிப்பு, பெருமிதம் கரை யெங்கும் குழுமியிருந்து கை கொட்டி ஆரவாரித்த அத்தனை மக்களின் முகங்களிலும் பிரகாசித்த வண்ணமிருந்தது.

இத்தனை பூரிப்புக்கும் அடிநாதமாக ஒலித்த கி. தொ. ஒ. வின் சாதனையும் - இந்த நாதத்தை - செவியும் - சிந்தையும் இனிக்கும் விதத்தில் இனிய கீதமாக இசைத்த Rev. S.K. கதிர்காமரின் தூய சேவையையும் செயற் திறனையும் கல்லாறு மக்கள் என்றும் மறக்க மாட்டார்களென்பது திண்ணம்.

முன்னதாக கி. தொ. ஒ. வின் சார்பாக திரு ரஞ்சித் டி சில்வா திரு. V. S. வேலு ஆகியோர் இயக்கத்தின் நோக்கங்கள், சேவைகளைப்பற்றி தெளிவாக எடுத்துரைத்தனர்.

கல்லாறு மீன்பிடி அபிவிருத்தி சங்க பொருளாளர் டேவிட் கண்ணப்பன் செயலாளர் வேலுப்பிள்ளை மக்கள் வங்கி - பத்மநாதன் ஆனந்தன் மீன்பிடி இலாகா சிறீஸ்கந்தராஜா Y. M. C. A. சிறிவர்தனா, கிருஷ்ணபிள்ளை, மெதடிஸ்த சபை சுகுணதாஸ், ஜபர்ஜி பிரதர்ஸ், கணேசசாமி, படகு தயாரிப்பாளர் நெவில் பெண்ர்ணடோ ஆகியோரும் உரையாற்றினர்.

20 பக்கத்தொடர்ச்சி......

## தொழிலாளரை சுரண்டும் சங்கங்கள்....

களில் தனித் தனி காலனிகளைப் போல் அமைத்து வசிக்கின்றனர். நீலகிரியில் இது போல் 17 இடங்களில் அகதிகளை குடியமர்த்தியுள்ள விபரங்களை சங்க அலுவலகத்தில் கண்டேன். கோத்தகிரியில் இவ்வாறு உள்ள இடங்களின் பெயர்களும் அமைக்கப்பட்ட திகதியும் வருமாறு.

ஓம் நகர் (1-6-78) வேல் நகர் (19-5-78) வெற்றி நகர் (1-6-78) செந்தில்நகர் (18-5-78) சிவா நகர் (24-5-78) சகதி நகர் (30-6-78) இவை ஒவ்வொன்றிலும் 100க்கு மேற்பட்ட ஓட்டு வீடுகள் இருக்கின்றன. ஓம் நகரில் மட்டும் 150 வீடுகளைக் கண்டேன்.

நிரந்தர தொழில் வாய்ப்பு, உத்தரவாதம் இல்லை என்றாலும் இருப்பிடம் ஒன்று இவர்களுக்கு இருப்பதால் பிறப்பு - இறப்பு - ஓட்டுப் பதிவு போன்றவைகளை சுலபமாக்கிக் கொள்ள முடிகிறது.

வசதியும், வாய்ப்பும், உள்ள பல சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் வசதிகளை நன்றாகப் பெருக்கிக் கொண்டிருப்பது வெளிப்படையாகவே தெரிகிறது வெளிநாட்டு உதவிகள் மூலம் தங்கள் உறவினர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நிறுவனங்களாக பல சங்கங்கள் செயல்படுகின்றன.

படுமோசமான நிலையிலுள்ள அகதிகளை மட்டும் வெளிநாட்டினருக்குக் காட்டி அதன் மூலம் கிடைக்கும் உதவிகளைக் கொண்டு தங்கள் வயிற்றை நிரப்பும் கேவலமான பிழைப்பை நடத்தும் இத்தகைய சங்கங்களை ஒழிப்பது மட்டுமல்லாது குறிப்பிட்ட வெளி நாட்டு நிறுவனங்களுக்கும் உண்மையை விளக்குவதன் மூலம் உதவி உண்மையாகத் தேவைப்படுகிறவர்களைக் காப்பாற்ற முயற்சிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர்களின் நீதிக்காக...!

நமது நாட்டில் பணவீக்கம் எட்டாத உச்ச கட்டத்தை அடைந்திருக்கும் நாள் இது. இக்காலத்தில் எமது இதயத்தின் எண்ணங்களோ வேலை நிறுத்தத்தால் பாதிக்கும் குடும்பங்களை நாடிச்செல்கிறது. சுதந்திரம், ஜனநாயகம், விடுதலை மற்றும் ''தார்மீக ஆட்சியின் அடித்தளங்களின் பெயரால், அரசாங்கம் அண்மையில் எடுத்த நடவடிக்கைகளினால் அதாவது தொழிலாளர்களின் வேலையைப் பறிமுதல் செய்த நடவடிக்கைகளினால். இந்த தொழிலாளர்களின் குடும்பங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டும், ஆதரவற்ற நிலைமைக்கும் தள்ளப்படுகிறார்கள்.

ஜூலை மாதம் 7ம் திகதி புகையிரத தொழிலாளர்கள். திடீரென வேலை நிறுத்தத்தில் இறங்கினர். இதற்கான உடனடி காரணம் 12 புகையிரத ஊழியர்கள் நியாயமற்ற முறையில் வேலை நீக்கம் செய்யப்பட்டதேயாகும். எனினும் காட்டுத்தீபோல பரவிய இந்த பொது வேலை நிறுத்தத்திற்கான காரணம், மின்னல் வேகத்தில் வளரும் பண வீக்கத்தையும் இமயம் போல உயர்ந்திருக்கும் வாழ்க்கைச் செலவையும் ஈடு செய்ய ரூ 300/- மாதாந்த சம்பள உயர்வு கொடுக்கும்படி விடுத்த கோரிக்கையே என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும் இந்த பொருளாதார கோரிக்கைக்கு அரசு கொடுத்த மறு உத்தரவோ இதைக் குறித்து பரிசீலனை செய்கிறோம் அல்லது அதிகார இனத்திற்கே உரித்தான மறுமொழியான ''இந்த விடயம் கவனத்திற் கெடுக்கப் பட்டுள்ளது'' என்பதேயாகும். வாழ்க்கைச் செலவு ஏற்றம் ஒரு நாளாந்த பிரச்சினையாகும். ஆகவே இதற்கு உடனடி தீர்வும் அவசியமாகும் இந்த அத்தியாவசியத்தை அரசிற்கு உணர்ந்த தொழிலாளர்களிடம் இருக்கும் ஒரே ஆயுதம் வேலை நிறுத்தமாகும். எனினும் தொழிற்சங்க பிரதிநிதித்துவம் மூலம் இந்த கோரிக்கையை எடுத்துரைத்தபோது அரசு அதனை கவனம் செலுத்தவில்லை. பின்னர் தொழிலாளர் தங்களது ஆகார இடைவேளையின் போது கூட்டு மறியல் போராட்டம் நடத்தியபோது குண்டர்களைக் கொண்டு அடிப்பது போன்ற வன் செயல்களை அரசு கையாண்டது' இறுதிக்கட்டத்திலே வேலைநிறுத்தமாகிய இந்த ஆயுதம் தொழிலாளர்களினால் கையாளப்பட்டது.

அரசின் தற்சமய கொள்கையின் அடிப்படையில், தொழிலாளர் எழுப்பிய இந்த பொருளாதார பிரச்சினைக்கு தீர்வுகாண வழிமுறைகள் அவர்களிடம் இல்லை. முதலாளித்துவ அமைப்பு முறைக்கு அனுகூலமாக பல மாற்றங்களை அரசு சென்ற இரண்டு ஆண்டுகளாக கைக் கொண்டது. இதன் விளைவாக செல்வர்களின் செல்வம் அதிகரித்தும், ஏழைகளோ கொடிய ஏழ்மை நிலைக்கு தள்ளப்பட்டதும், வாழ்க்கை செலவு கட்டுப்பாடற்று ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டதும் வாழ்க்கைச் செலவு கட்டுப்பாடற்று ஏறினதுமேயாகும் இறக்குமதிப் பொருட்களின் கட்டுப்பாட்டை அகற்றல், ரூபாயின் பெறுமதியை குறைத்தல், அதிகமான பணத்தை புழக்கத்திற்குவிடல் புதிய தொழில் துறைகளில் எல்லையில்லா சலுகை வழங்கல் என்ற போர்வையில் செல்வமுடையோருக்கு கொடுக்கப்பட்ட சலுகைகள் நமது தொழிலாளர்களின் உழைப்பிற்கு குறைந்த ஊதியம் கொடுக்கும் சூழ் நிலைகளை உண்டாக்கல், கட்டுப்பாடற்ற வெளிச்சந்தையின் ஊடுருவல் இந்த நடவடிக்கைகள் எல்லாம் செல்வமுடையோருக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்பு வளமிக்க நற்பேறு பெற்ற பெரும் அறிய வெகுமதிகளாகவே அமைகிறது. இந்த அமைப்பு முறையில் பாதிக்கப்பட்டோரே. தொழிலாளர்களும், குறிக்கப்பட்ட அல்லது வரையறுக்கப்பட்ட மாதாந்த வருமானம் பெறும் வர்க்கத்தினரே ஆவர். இவர்களுடன் கிராமப்புற சிறு விவசாயிகளும் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். தங்களது உள்ளக் குமுறல்களை எடுத்துக்கூற கூட்டமைப்பு முறையற்று தவிக்கின்றனர். எனவே தொழிலாளர்களினால் எழுப்பப்பட்ட இந்தப் பொருளாதாரப் பிரச்சினைக்கு, அரசு தனது கொள்கைகளை மாற்றி யமைக்காமல் விடைகாண முடியாது என்பது தெட்டத் தெளிவான உண்மையாகும்.

எனவேதான் இன்றைய அரசு பொரு

ளாதார ரீதியான இந்தப் பிரச்சினைக்கு ஒரு அரசியல் திருப்பத்தை கொடுக்கிறது இந்த வேலை நிறுத்தம். அரசியல் ரீதியானதென்றும் இது அரசை கவிழ்க்க நடத்தப்படும் சதியெனவும் பறைசாற்றுகிறது. உண்மையில் இந்த அரசு தானுகை இந்த வேலை நிறுத்தத்தை அரசியல் பிரச்சினையாக மாற்றி வருகிறது. அதனுல்தான் தொழிற் சங்கங்களை அடியுடன் அழித்துவிட இந்த அரசு நோக்கம் கொண்டுள்ளது அரசின் இந்த நோக்கத்தினுல்தான் தொழிற் சங்கத் தலைவர்களையும் பிரித்து வைத்தது மட்டும் அல்லாமல் மற்றவர்களை இனிமேல் வேலைநிறுத்தத்தில் ஈடுபடும் தொழிற் சங்கங்களில் அங்கம் வகிக்க மாட்டேன் என வாக்குறுதிகளும். உத்தரவாதமும் அளித்து தலைகுனிய வைத்து சரணடைய வைக்க முயலுகிறது. இவ்வரசு இதனைத் தொடர்ந்து நிறைவேற்ற உறுதி பூண்டுள்ளது. வேலை நிறுத்தத்தில் ஈடுபடுமுன் பணிபுரிந்த 17 நாட்களுக்கான ஊதியத்தை வழங்கவும் அரசாங்கம் இத்தகைய இழிவான, அவமதிப்பான உத்தரவாதங்களை கையொப்பமிட வற்புறுத்துகிறது. வேலை செய்த நாட்களின் ஊதியத்தை தொழில் நீதிமன்றங்கள் அல்லது முறையீட்டு மன்றங்கள் கூட தடை செய்வதில்லை. இது தொழிலாளரின் உரிமையாகும், வேலையிலிருந்து அகற்றப்பட்ட வீட்டு வேலையாட்களுக்குக்கூட வேலை செய்த நாட்களுக்கான ஊதியம் வழங்கப்படுவதுண்டு. அவ்வாறிருக்க பணிபுரிந்த 17 நாட்களின் ஊதியத்தை கொடுப்பதற்கு இத்தகைய உத்தரவாதங்களை தரும்படி வலியுறுத்துகிறது. இந்த அரசு, இத்தகைய நடவடிக்கைகளும், தொழிற்சங்க வங்கி சேமிப்புகளை தற்காலிகமாக பறிமுதல் செய்த நடவடிக்கைகளும், 20ம் நூற்றுண்டிலேயே தொழிலாளர்கள் - அதிகாரிகளின் கீழான நிலை என எமது சரித்திரம் எடுத்துக் கூறும்.

தொழிலாள வர்க்கத்தின் உரிமைகளை கொடிய அடக்கு முறைகளினுலும், வன்முறைகளினுலும் நசுக்கி சரித்திரம் படைத்த இந்த அரசு தற்போது அரசாங்கத்துறையில் வேலை நிறுத்தத்தை முற்றிலும் தடை செய்ய திட்டமிட்டிருக்கிறது. பொது நல நாடுகளை இதற்காக ஆதாரம் காட்டி வருகிறது. அரசின் துரதிஷ்டவசமாக கடந்த சிலநாட்களில் போலந்து நாட்டு தொழிளாளர் அவர்களின் அரசிற்கெதிராக வேலை நிறுத்தம் செய்து வெற்றி கண்டிருக்கிருர்கள். அதே வேலையில் நமது அரசு தூய்மையானதும். முழுமையானதுமான ஜனநாயகம் செழித்தோங்குவதாகக் கருதுகிறது. வேலை நிறுத்தம் தடை செய்யப்படும் ஜனநாயகத்தின் வலையினை நாம் அறிந்ததலை.

தற்போது வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர்களை எவ்வித நிபந்தனையுமின்றி மீண்டும் வேலையில் அமர்த்துவதும தொழிற் சங்கங்களுடன் அவர்களின் நீதியான கோரிக்கைகளை குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதுமே இப்பிரச்சனைக்கு தீர்வுகாண கூடிய ஒரே வழியாகும். காலம் தாமதிக்காமல் இந்த நடவடிக்கை எடுக்கும்படி அரசாங்கத்தை அழைக்கின்ருேம். சகல அரசாங்க தொழிற் தலங்களும், அலுவலகங்களும் பார தூரமான முறையில் பாதிக்கப்பட்டும் இருக்கிறது.

சில இடங்களில் நாளாந்த வேலை முற்றிலும் தடைபெற்றிருக்கும் வேளையில் ஒன்றும் நடவாதது போல கண்மூடித்தனமாக இருப்பது பயனற்ற செயலாகும். இதனை ஒரு எச்சரிக்கையாக எடுத்து, தனது குறுகிய மனப்போக்கினையும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் கொள்கைகளையும் மாற்றி யமைப்பதோடு, தொழிளாளர்களை மீண்டும் வேலையிலமர்த்தவும், அவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி, உண்மையும் பலனுடையதுமான ''தார்மீக'' தீர்வை காணும்படி அரசை வேண்டுகிருேம்.

இது மனித உரிமைகளை மீறுகின்ற பிரச்சனை மட்டுமல்ல. மனக்கசப்படைந்தும், விரக்தியடைந்தும், தற்காலிகமாக சோர்வடைந்த தொழிலாள வர்க்கம் எந்த அரசினதும் ஒரு முகமான சொத்தாக மாறிவிடாது. நெடுங்கால போக்கில் இது அரசினது உறுதி நிலையையே பாதிக்கக்கூடும். நல்லறிவும் நல்மனப் போங்கும் செயல் படவேண்டிய காலமிது.

**கிறிஸ்தவ தொழிலாளர் ஒத்துழைப்பு வெளியிட்ட அறிக்கை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி (கேம்பில்) மண்டபம் முகாமில் மாடுகளுடன்
## மக்கள் படும் அவதி!

திருச்சி 'தாயகம் திரும்புவோர் வர வேற்பு முகாம்' என்ற கவர்ச்சியான பெயரை தாங்கியுள்ள மண்டபம் முகாமில் தங்கியுள்ள அகதிகள் நிலை மிகவும் பரிதாபமாகவுள்ளது.

சில குடும்பங்கள் ஒரு வருடம் ஒன்றரை வருடங்களுக்கு மேலாகியும் எதுவித ஏற்பாடு களும் செய்து தரப்படாமல் தங்கள் சொந்தப் பணத்தையும் செலவு செய்து, அதுவும் போதா மல் நகை நட்டுகளையும் விற்று உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

### வியாபாரக் கடன்

வியாபாரக் கடனாக ரூபா 500 பணமாக வும் ரூபா 2500 பேங்க் டிராப்டாகவும் கொடுக் கப் படுகிறது. அகதிகளில் 85 வீத மானோருக்கு வியாபாரக் கடனே வழங்கப் படுகிறது. பல வழிகளாலும் இக் கடனைப் பெற இவர்கள் நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். இந்தக் கடனைப் பெறுபவர்கள் ஓராண்டுக்குள் தங்கள் வியா பார வளர்ச்சியைத் திருப்திகரமாக நிரூபிக்



படத்தில்: திருச்சி மண்டபம் முகாமின் முன்னால் தாயகம் திரும்பியோர் சிலர்.

ராமேஸ்வரம் முகாமில் தங்குபவர்கள் ஓரிரு வாரங்களுக்குள் வியாபாரக் கடனோ வேலை வாய்ப்புகளோ கொடுக்கப்பட்டு அனுப் பப் பட்டு விடுகிறார்கள். திருச்சி முகாமிற்கு அனுப்பப் படுகிறவர்கள்தான் 'பாவம்' செய்த வர்கள். இவர்களை விரைவில் அனுப்பி விட் டால் தங்களுக்கு வேறு வேலை இல்லை என்பத னாலோ என்னவோ இங்குள்ள அதிகாரிகள் சுறு சுறுப்பு காட்டாமல் அலட்சிய மனோ பாவத்து டன் இருக்கின்றனர்.

காத பட்சத்தில் கடனின் மிகுதித் தொகை ரூபா 2000 கிடைக்காது. அகதிகளில் இக் கட னைப் பெற்றவர்களில் 10 வீத மானோர் கூட வியாபாரம் செய்வதில் பல்வேறு காரணங்களி னால் தோல்வியே காண்கின்றனர். இதனால் புனர்வாழ்வு என்பது பெரும்பாலானோருக்கு ரூபா 3000/- த்தோடு முற்றுப் பற்று விடுகின் றது. அத்தோடு இந்திய அதிகாரிகள் கை விரி த்து —கதவடைத்து விடுகிறார்கள். இதனால் இப்போது வியாபார கடனை ஏற்பதற்கு பலரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுத்துவருவதால் புதிதாக ''மாட்டுக்கடன்'' வழங்க ஏற்பாடு செய்திருக்கின்றார்கள்.

## மாடு வளர்ப்புக் கடன்

பால் மாடு ஒன்றும், வீடும், நிலமும் வியாபாரக் கடனுக்குப் பதிலாக வழங்கப்படுவதாக திருச்சி முகாமில் கூறியதை 13 குடும்பங்கள் ஏற்றுக் கொண்டதால் கடந்த ஜூலையில் உடனடியாக 13 மாடுகளும் வாங்கிக் கொடுக்கப்பட்டன. ரூபா 3000 க்குக் கொடுக்கப் பட்ட (அதிகாரிகளினால்) மாடுகள் 2 – 3 லிட்டருக்கு மேல் பால் தருவதில்லை. பணத்தைக் கொடுங்கள் நாங்கள் மாடுகளை வாங்கிக் கொள்கிறோம் என்று கேட்டதற்கும் அதிகாரிகள் கொடுக்கவில்லையாம். தினமும் மாட்டிற்குத் தீவனம் (வைக்கோல்) வாங்க ரூபா 8 வீதம் ஒவ்வொருவரும் செலவு செய்கின்றனர். வருமானம் பாலில் ரூபா 5 க்கும் குறைவுதான்.

## நிலம் வீடு

திருச்சியிலிருந்து 24 கிலோமீட்டர் தூரத்தில் இந்த 13 குடும்பங்களுக்கும் (GUN FAC-TORY அருகில்) 13 வீடுகள் கட்டப்படும் இடத்தைச் சென்று பார்த்தேன். அந்த வீடுகள் ஒவ்வொன்றும் 10 x 6 அடி பரப்பு அளவு கொண்ட ஒரே ஒரு அறையைக் கொண்டிருக்கின்றன. 13 குடும்பங்களுக்கும் ஒரே ஒரு கிணறு தோண்டப்பட்டுள்ளது அதில் அரைவாசி கலங்கள் நீர் இருந்தது. மாடுகளுக்கு புல் வளர்ப்பதற்கேற்ற நிலமாகவும் அது இல்லை: ஏற்கனவே பர்மா அகதிகள் இந்த இடத்தில் குடியிருக்க ஏற்பாடு செய்யப்பட்டு அவர்கள் மறுத்து வேறிடம் குடியமர்ந்துள்ளனர். (அந்த அகதிகள் இடத்தையும் பார்த்தேன் அது ஓரளவு நீர் வசதியும் போக்குவரத்து வசதியும் உள்ளது.)

மாடு வளர்க்கும் திட்டத்தை ஏற்று சம்மதம் தெரிவித்த 13 பேரில் 12 பேர் இந்த இடத்தைப் பார்த்துவிட்டு வந்தபின், தங்களுக்கு மாடுகள் வேண்டாமெனக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஒருவர் மட்டும் அதிகாரிகளுக்கு ஆதரவான குரல் கொடுப்பதாக மற்றவர்கள் கூறினார்கள். மாடுகள் இறந்தாலும் நஷ்ட ஈடு ஒன்றுமில்லை. சமீபத்தில் ஒரு கன்று இறந்து போனதால் எல்லோரும் கலக்கம் அடைந்திருக்கின்றனர்.

தற்போது அகதிகள் தங்கியிருக்கும் மண்டப அறைகளுக்கு முன்னாலேயே மாடுகள் எல்லாம் பிள்ளைகள் சகிதம் – மலசல இத்தியாதிகளுடன் 'சுகதேகிகளாக' வாசம் செய்து கொண்டிருக்கின்றன. இதே முகாமிற்கு முன்னால் அகதிகளுக்கு சேவை செய்வதாகக் கூறிக் கொள்ளும் ஒரு பிரபல சம்மேளனமும் பெரிய ஒரு பெயர்ப் பலகையுடன் தனது அலுவலகத்தைக் கொண்டிருக்கிறது.

வியாபாரக் கடன் ரூபா 5000, வீட்டுக் கடன் ரூபா 6000 மும் ஆக, ரூபா 11,000 க்கு 2 லிட்டர் பால் தரும் ஒரு (1) மாடும், 10x6 அடி ஒற்றை அறையும் நீர் இல்லா இடத்தில்! என்னே மறு வாழ்வுத் திட்டத்தின் மகத்துவம்!

## வெற்றி உனதே!

கண்களின் நீரைத் துடைத்துவிடு
கலக்கம் என்பதை மறந்து விடு
நெஞ்சினில் உறுதியை வளர்த்து விடு
நிச்சயம் வெற்றி உனதாகும்!

நாளை என்றோர் நாளிருக்கு – அதில்
நிச்சயம் வாழ்வு காத்திருக்கு
வேளை வரும் வரை பார்த்திருந்து - உன்
வெற்றிக் கொடியை நாட்டி விடு !

உயர்வு தாழ்வுகள் பேதமின்றி –நீ
உண்மை யன்பை உனதாக்கு
சோர்வினை அகற்றிப் பாடு படு – நல்
சுதந்திரம் உன்னைத் தேடி வரும் !

சாதிப் பிரிவினை நீ பாராய் – என்றும்
சமத்துவம் என்னும் முரசறைவாய்
நீதிக் கரங்களின் முன்னாலே – அந்த
நீசர் மடிவார் உண்மையிது!

C. நித்தியானந்தன்.

வயலுக்குச் சொந்தமில்லாதவன் அறுவடைக்கு அரிவாள் தூக்கிக் கொண்டு வருவதை 'உரிமை' என்று வாதாடுவதே அரசியல் சட்டம்!

## வேலை நிறுத்தக்காரருக்கு

# கதவடைப்பு !

தொழிற் சங்கங்களின் கூட்டுச் செயற் குழு அதன் அங்கத்தவர்களை 1980 ஜுலை 11ந் திகதி முதல் பொது வேலை நிறுத்தத்திற்கு அழைத்தது. இவ் வேலை நிறுத்தம் பின்வரும் கோரிக்கைகளைக் கொண்டதாக இருந்தது.

1. ரூபா 300 மாதாந்த சம்பள உயர்வு.
2. ஒவ்வொரு பிரிவிலும் வாழ்க்கைச் செலவின் அம்சம் அதிகரிப்பதற்கேற்ப ரூபா 5 சம்பள உயர்வு.
3. எதிர்ப்புத் தினமான ஜுன் 5ம் திகதி நடவடிக்கைகளில் பங்கு பற்றியவர்களுக்கான தண்டனைகளை வாபஸ் பெறல்.

ஒரு போதும் இல்லாதவாறு நாட்டில் பணவீக்கம் உயர்ந்துள்ள நிலையில் முதலிரண்டு கோரிக்கைகளும் அத்தியாவசிய மாகின்றன. தற்போதைய பணவீக்க அதிகரிப்பு 42 % என கணிக்கப் படுகிறது. அரசாங்கத்தின் பொதுச் சந்தைக் கொள்கையினால், நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது. இதன் காரணமாக ரூ. 300 க்கு மேற்பட்ட வருமானமுள்ள குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் மானியம் கிடையாது. முற்றாக நீக்கப் பட்டுள்ளது. (உணவுப் பொருட்கள் மானியம் நீக்கப் பட்டதால் 90 % தோட்டத் தொழிலாளர் பாதிக்கப் பட்டுள்ளனர் என கணிக்கப் பட்டுள்ளது.

மார்ச் மாதம் 8ம், 9ம் திகதிகளில் கொழும்பில் நடை பெற்ற தொழிற் சங்கங்களின் கூட்டுக் குழுவில் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கூட்டத்தில், மேற் கூறிய இரு கோரிக்கைகளுடன் 1979 பிற்பகுதியில் உருவான ஏனைய பல கோரிக்கைகளும் சேர்க்கப் பட்டன. இக் கோரிக்கைகள் அனைத்தும் மார்ச் மாதத்தில் அரசாங்கத்துக்கும் ஏப்ரல் மாதத்தில் இலங்கைத் தொழிலாளர் சம்மேளனத்திற்கும் சமர்ப்பிக்கப் பட்டன. இக் கோரிக்கைகள் குறித்து அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தொழிலாளர் சம்மேளனமும் பிரத்தியேகமான வகையில், இக் கோரிக்கைகள் குறித்து அர்த்தமுள்ள எதனையும் எடுக்கத் தவறி விட்டது. மே 24ல் தொ. கூ. செ. கு. இக் கோரிக்கைகளின் அடிப்படையில் கொழும்பில் ஒரு பகிரங்கக் கூட்டத்தை நடத்தியதுடன் ஜுலை 5ம் திகதி யன்று இதனை வெளிப் படுத்தும் வகையில் (மதிய உணவு வேளை மறியல்) போராட்டம் ஒன்றினையும் நடத்தியது.

இப் போராட்டத்தின் அம்சமாகப் பல தொழில் நிலையங்களில் அரை நாள் வெளி நடப்பும் இடம் பெற்றது. இதற்குப் பதிலளிக்கும் வகையில் அரசாங்கமும் எதிர்ப்பு ஒன்றினை நடத்தியதுடன் மறியல் செய்த தொழிலாளர் மீது முரடர்களையும் ஏவி விட்டது. பொலிசார் இதில் தலையிடவில்லை. இதன் விளைவாக பொது சேவக சங்கமயவின் அரசாங்க விநியோகப் பிரிவின் தலைவரான திரு D. சோமபால என்பவர் கொல்லப் பட்டதுடன் அமைதியான முறையில் மறியல் செய்த தொழிலாளர் பலர் காயமடைந்தனர். ஜுன் 9ல் நடை பெற்ற சோமபாலாவின் மிகப் பெரிய அளவில் காணப் பட்டது.

தொழில் நிலையங்களிலிருந்து தொழிலாளர் பெருந் திரளாக மரணச் சடங்கில் கலந்து கொண்டனர். இரத்மலானை புகையிரத வேலை தளத் தொழிலாளர்கள் 12 பேர் எவ்வித காரணமுமின்றி வேலையிலிருந்து நிறுத்தி வைக்கப் பட்டதனால் ஜுலை 27ல் அங்குள்ள தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். இவர்கள் மேற் குறிப்பிட்ட இரண்டு கோரிக்கைகளுடன் தடுத்து வைக்கப் பட்டுள்ள 12 தொழிலாளர்களைப் பற்றிய கோரிக்கையையும் இவர்கள் முன் வைத்து வேலைநிறுத்தம் செய்தனர். இவ்வேலை நிறுத்தம் இலகு விரைவில் வேறு வேலைத்தளங்களுக்கும் பரவியதுடன் தொ. கூ. செ. கு. ஜுலை 17ந் திகதி முதல் ஒரு பொது வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தது. அரசாங்கம் ஜுலை 16ந் திகதி நள்ளிரவுமுதல் அவசரகால நிலைமையை பிரகடனப் படுத்தி பொதுபாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பொதுசன சேவை அல்லது பொருளாதார சேவையின் எந்தப் பிரிவிலாயினும் உள்ளவர்கள் வேலை நிறுத்தம் செய்வதை சட்ட விரோதமான செயலாக்கியது. அவசரகால நிலை 41ம் விதிப்படி அரசாங்கத் தொழிற் சாலையிலோ அல்லது சேவையிலோ - இது சகல தொழிற்சாலைகளை

27ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சோமபாலாவின் இறுதி யாத்திரை (அத்த அனுமதியுடன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(23 ம் பக்கத் தொடர்ச்சி)

யும் சேவைகளையும் உள்ளடக்கும் - உள்ள எந்த ஒரு நபரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் வேலையிலிருந்து அவர் வெளியேற்றப்படுவார். அப்படியிருந்தும் வேலை நிறுத்தத்திலீடுபடுவோர் வேலைக்குத் திரும்புவதற்கென அரசாங்கம் குறித்திருந்த இறுதி தினமான ஜூன் 18ந் திகதியன்றும் அநேக தொழிலாளர் பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

பொது வேலை நிறுத்தத்தை நசுக்குவதற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் சபைச்சுதந்திரத்தையும், கூட்டுஒப்பந்த உரிமையும் கீழ்க்காணும் வகைகளில் பறிப்பனவாயுள்ளன.

1. விசேட அரசாங்க அறிக்கையின் மூலம் வேலை நிறுத்தத்தை சட்டவிரோதமாக்கியது.

2. வேலை நிறுத்தத்திற்கு மூலகாரணம் பொருளாதாரமென பலர் அரசாங்கத்துக்கு எடுத்துக்காட்டிய போதிலும் இவ் வேலை நிறுத்தம் அரசியல் தொடர்புள்ள அல்லது அரசியல் பின்னணியமுள்ள அல்லது அரசியல் ஆதரவுள்ள வேலை நிறுத்தமென பொய்யான காரணங்களைக் காட்டி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிற் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்த மறுத்தது.

3. வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீங்கிக்கொண்டனர் எனக்கணித்து அவர்களுக்கு மோசமிழைக்கும் வகையில் அவர்களிடத்துக்குப் புதியவர்களை நியமித்தது.

40,000 தொழிலாளர் மட்டுமே தங்கள் வேலைகளிலிருந்து நீங்கிக் கொண்டனர் என அரசாங்கம் கூறும் அதே வேளையில் தங்கள் வேலைகளை இழந்துள்ளோரின் உண்மையான தொகை 100,000 என மற்றவர்கள் கூறுகின்றனர். இவர்களின் குடும்பங்களையும் சேர்த்தால் குறைந்தது சுமார் 300,000 முதல் 400,000 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வேலை நிறுத்தம் முடிந்துவிட்டது. புதியவர்கள் வேலைக்குச் சேர்க்கப்பட்டுள்ளனர் என அரசாங்கம் நடித்தாலும் சேர்க்கப்பட்ட புதியவர்கள்மிக அனுபவம் குறைந்தவர்களாயிருப்தால் பல வேலைத்தலங்களில் இவர்கள் வேலை செய்ய முடியாத நிலையிலுள்ளனர். மேலும் பல பகிரங்க பொது வேலைத்தலங்கள் இன்னும் செயல்படாத நிலையிலேயே இருக்கின்றன. உற்பத்தி பாதிக்கப்பட்டு வளர்ச்சி குன்றியுள்ளது. மனித உரிமை சங்கம் மற்றும் பல பொது சேவை சங்கங்கள் சமயத் தலைவர்கள் பலரும் அரசாங்கத்துக்கு விண்ணப்பித்த போதிலும் தொழிற்சங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு முடிவுக்கு வர அரசாங்கம் மறுத்துள்ளது.

— தொழிலாளர் பொழில்

6ம் பக்கத் தொடர்ச்சி.........

ஏன் அவசரம்? எல்லோரையும் ஏத்திக் கொண்டுதானே கப்பல் போகும்! இல்லை 850 பேர்தான் கப்பலில் போக முடியும். மிஞ்சியானோர் அடுத்த கப்பலில்தான் போக வேண்டும் இரண்டு நாள் தங்கினால் எவ்வளவு செலவு? தங்கும் வசதி எப்படி? இதனாலேயே முந்திக் கொண்டு ஓடவேண்டியுள்ளது.

நாங்களும் கப்பலுக்குள் போய்விடுகிறோம். அங்கேயும் வரிசை சோதனை 10-30 மணி கப்பல் புறப்படுகின்றது. புத்தகயா-தம் மதிவு போகும் பயணிகள்; புத்தம் சரணம் கச்சாமி - தம்மம் சரணம் கச்சாமி என்று பாடி வணங்குகின்றனர். எல்லாம் முடித்துக்கொண்டு தாயகம் திரும்புவோர் கப்பல் புறப்படும் வரை நின்று தங்களை அனுப்ப வந்தவர்களிடம் ஓலம், ஒப்பாரியோடு விடை பெறுகிறார்கள்; ஒரு புறம் புத்தருக்கு சரணம்! மறுபுறம் ஒப்பாரி! இரண்டும் ஒரே கப்பலில்! 150 ஆண்டுகளாக உழைத்து உருக்குலைந்து. ஊரை விட்டே போகிறவர்களை, இந்த நாட்டை மறந்த பொழுது; பாவம் கப்பல் என்ன செய்யும்?

கப்பல் நகர்கிறது. கப்பலில் பிரயாணம் செய்யும் பொழுது, முன்பு பட்ட கஷ்டம் மறந்துபோய்விடுகிறது. சுமார் 12-00 மணியளவில் அந்தக்கரை அடைந்து விடுகிறோம். தொலைவிலேயே கப்பலை நிறுத்தி லோஞ்சுகளில் அழைத்துச் செல்லப்படுகிறோம். அந்தக் கரையில், ராமேஸ்வரம் சோதனை முகாம். முதலில் பாஸ்போர்ட் சோதனை! விசா சோதனை! 2-00 மணிக்கு தொடங்கியது நாங்கள் வரிசையாக நிற்கின்றோம். தண்ணீர் தாகம், வரிசையில்

29ம் பக்கம் பார்க்க......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இடமிருந்து வலம்

இல: 1. முருகனின் புனிதத் தலங்களில் ஒன்று.
இல: 7. மாறிக் கிடந்தாலும் இசைக்கலாம்.
இல: 10 சிலர்திபின் இதை எப்படி செய்வது?
இல: 15. படி: சிலே செதுக்க உதவும்.
இல: 19. சரிசெய்தால் பெண்கள் அணிவார்கள்.
இல: 23. மாறிக் கிடப்பதால் அடித்தால்...ஆ!
இல: 27. இது வந்தால் தண்ணீர் குடிப்போமே
இல: 31. துகிலை உரிந்தவனை தலை கீழாய் நிற்க வைப்பதுதான் தண்டனையோ?

மேலிருந்து கீழ்

இல: 1. தமிழகக் கவிஞர் ஆஸ்தானத்திலே வீற்றிருக்கிறார்.
இல: 2. மாற்றினால் மங்கையரின் பக்தி வருமோ
இல: 4. இந்த வேலை பார்க்கும் போது தூங்கினால் எப்படி இருக்கும்?
இல: 5. உயர்ந்து இருந்தாலும் சில நேரங்களில் 'இதுவும்' ஏற்படும்.
இல: 15. குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க, இது கொடுத்தால் சன்மானம் உண்டோ?
இல: 28. நேரடியாகப் பார்த்தால் வெளி நாடு போகத் தேவைதான்.... மாற்றிவிட்டால் திறக்கலாமோ?
இல: 23. கஞ்சி ஊற்றுவிட்டாலும் குழம்பாதிருந்தால் இது கட்ட வருவானே!
இல: 18 இது வந்தால் தொண்டையை அடைக்குமாமே?

## மாணவர் குறுக்கெழுத்துப் போட்டி இல: 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 ம | 6 |
| 7 | 8 | 9 * | 10 | 11 | 12 * |
| 13 | 14 * | 15 | 16 | 17 * | 18 |
| 19 | 20 | 21 வ | 22 * | 23 | 24 |
| 25 | 26 * | 27 | 28 | 29 க | 30 |
| 31 ன் | 32 | 33 | 34 | 35 | 36 |

மாணவர்களே! சென்ற இதழில் வெளியான மா. கு. போ. இல: 1 ற்கான சரியான விடைகளைக் கீழே தருகிறோம். இல: 2 க்கான கூப்பனும், விபரங்களும் தரப்பட்டுள்ளன. உங்களின் சரியான விடைகளை அனுப்புங்கள்

மாணவர் குறுக்கெழுத்துப் போட்டி இல: 2
'கொந்தளிப்பு'
88/2, டன்பார் ஒழுங்கை,
அட்டன்.

சென்ற இதழ் சரியான விடைகள்

இடமிருந்து வலம்:
1. திகதி 2. இசை 11. வடி த்திரி 21. கப்பல் 25. புலன் 29. காது 34. தகைமை

மேலிருந்து கீழ்:
1. தினகரன் 3 தித்திப்பு 5. வசை 6. இடி 16. கரி 23. காதல் 24. பதுமை 26. சில

### கணக்கு விடும் கணக்கு

1. '142857' என்ற எண்ணில் ஓர் அற்புதம் பொதிந்துள்ளது. ஏனெனில் அந்த எண்களை 1,2,3,4,5,6 ஆகிய எண்களால் பெருக்குவோமாயின் 142857 ஆகிய எண்களே வேறு விதமான ஒழுங்கில் மாறி மாறி அமையும். உதாரணம்,
   142857×1 = 142857, 142857×3 = 428571
   142857×2 = 285714, 142857×4 = 571428
2. சில எண்களும் அவற்றின் மும் மடங்கு பெருக்கங்களும் காட்டும் விசித்திரங்களைப் பாருங்கள்.
   $8^3 = 512$ ஆனல் $5+1+2 = 8$
   $17^3 = 4913$ ஆனல் $4+9+1+3 = 17$
   $18^3 = 5832$ ஆனல் $5+8+3+2 = 18$
3. பத்திலிருந்து ஒன்றை எத்தனை முறை கழிக்கலாம?
   ஒரே ஒரு முறைதான். அதெப்படி என்று கேட்கிறீர்களா? பத்திலிருந்து ஒன்றைக் கழித்தபின் அது ஒன்பதாகி விடும் தானே!

தொகுப்பு: எஸ், பிரபாகரன்,
புனித தோமையர் கல்லூரி, மாத்தளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27ம் பக்கத் தொடர்ச்சி.........

போய்க்கொண்டிருக்கிறோம். அடுத்து சாமான்கள் சோதனை.

வெளியே போகுமுன் எத்தனை மூட்டை இருக்கின்றதோ, ஒவ்வொரு மூட்டைக்கும் ரூ. 2/- கொடுக்க வேண்டும். மூட்டை என்றாலும் சரி, பார்சல் என்றாலும் சரி. அது முடிந்து, ஆள்வரி, நபர் ஒன்றுக்கு ரூபா 1/- விதம் கொடுக்க வேண்டும்.

இந்த இடத்திலே நான் ஒரு முக்கியமான விஷயம் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். அங்குள்ள போட்டர்களிலிருந்து பெரிய அதிகாரிகள் வரை மரியாதை தெரியாதவர்கள் பயணிகளை நாயை விரட்டுவது போல் விரட்டுகிறார்கள். வரிசையாக போய்க்கொண்டிருக்கையில் போர்ட்டர்கள் அவர்களுக்கு வேண்டியவர்களை கூட்டி வந்து முன்னே அனுப்பி விடுகிறார்கள். வரிசையில் காத்திருக்க மணிக்கணக்காக குடிக்கத் தண்ணீரின்றி நிற்பவர்களுக்கு கோபம் வராதா? அவர்கள் சத்தம் போட்டுக்கொண்டு முண்டியடித்துக்கொண்டு முன்னேறிக்கொண்டிருக்கும் பொழுதுதான் பொலிஸ்காரர்கள் வந்து வரிசையில் நிற்பவர்களைப் பிடித்துத்தள்ளி களாட்டா செய்கிறார்கள். அப்படி ஓரிடத்தில் பொலிஸ்காரர்கள் தள்ளும் பொழுது பலர் கீழே விழுந்துவிட்டார்கள்.

நான் 6ம் நம்பர் கவுண்டரிலுள்ள அதிகாரியிடம் அகப்பட்டுக்கொண்டேன். இரண்டு மணித்தியாலங்களாக அவரின் முன்னிலையில் அழாத குறையாக நின்று கொண்டிருக்கிறேன். என்னுடைய பாஸ்போர்ட்டை வாங்கவுமில்லை சாமான்களைப் பார்க்கவுமில்லை. போர்ட்டர்கள் அடிக்கடி மூட்டைகளைத் தூக்கிக்கொண்டு வந்து வைக்கிறார்கள். அதைத்தான் அதிகாரி பார்க்கிறார்: நான் நின்று கொண்டே இருக்கிறேன்; மணி நாலு ஆச்சு!

அப்பா! நாங்க 10 பேர் வந்தோம்: அவுங்க எல்லாம் பொயிட்டாங்க; ஒரே ஒரு சூட்கேஸ்தான்: தயவு செஞ்சி வாங்கைய்யா. நான் 2 மணியிலயிருந்து நிக்கிறேன் என்றேன்.

அடேயப்பா! இவுரு மட்டுந்தான் நிக்கிறாரு: இந்த ஆளப் புடிச்சித் தள்ளுய்யா என்றான் நான் மறுபடியும், 50 ரூபா தாரேய்யா என்று கெஞ்சினேன். நான் வைத்திருந்த 4 பத்துரூபா நோட்டுகளை அவன் பாக்குறுப்புள பாஸ்போட்டில் வைத்து நீட்டினேன் பிறகு என்னைப் பார்த்து என் பாஸ்போட்டையும், பணத்தையும் இரண்டு கைகளாலேயும் பொத்திக்கொண்டே எவ்வளவுய்யா இருக்குது? என்றான். நான் 50 ரூபா என்றேன். சரி! போய்யா என்று சோக்கட்டியால் சூட்கேஸில் மார்க்போட்டான் ஒரே ஓட்டம்...... எங்கள் குழுவோடு போய்ச் சேர்ந்து கொண்டேன்! அந்த 40 ரூபா இலங்கை நாணயப்படி 80 ரூபா ஆகும்.

ராமேஸ்வரத்திலிருந்து மதுரை மற்றும் இடங்களுக்கு போகும் அத்தனை புகைவண்டிகளுமே கரி கோச்சுகள்தான். மற்ற ஊர்களிலெல்லாம் மின்சாரம்-டீசல் வண்டிகள்! இலங்கையிலிருந்து திரும்புபவர்களுக்கு மட்டும் 'கரிக் கோச்சுகள்' கப்பலும் அக்பர் காலத்து கப்பல் ராமேஸ்வரத்துக்கு கப்பலிலிருந்து பயணிகளை ஏற்றிச் செல்ல பயன்படுத்தப் படுவதும் ஒன்றுக்கும் பிரயோசனப்படாத சாமான் ஏற்றும் படகுகள்! கேட்பதற்கு நாதியில்லை.

---

உங்கள் ஆக்கங்கள் எதுவாயினும் அதைத் தாளின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதி.

ஆசிரியர்,
"கொந்தளிப்பு"
88/2, டன்பார் ஒழுங்கை,
அட்டன்.
என்ற முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்.

---

Registered as a News Paper in Sri Lanka

விலை ரூபா 2/50


# கொழுந்து

தாயகம்

திரும்பியோரின்

வாழ்க்கை நிலைகள்

பற்றிய கட்டுரைகளுடன்

வெளிவருகிறது !

# கொழுந்து!

எல்லாப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்.


இவ்விதழ் கொண்டகெல, லப்புக்கெலயில் வசிக்கும் மு. நேசமணி என்பவருக்காக மஸ்கெலியா விக்டோரியா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org